Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| மலர் கஉ | பிரமாதி ஆண்டு வைகாசித் திங்கள் 1939ஞு மேமீ | இதழ் ரு |
| --- | --- | --- |

## முத்திநிலையில் ஆணவத்தின் தன்மை

[அ. சோமசுந்தரம் செட்டியார், M. A.]

**சை**வ சித்தாந்தத்தின்படி, பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள்களும் என்றும் அழியாத பொருள்கள். ஆன்மாக்கள் பாசம் அல்லது மலத்தினின்றும் நீங்கி இறைவனை அடைந்து பேரின்பத்தை என்றும் நுகர்ந்திருத்தல், முத்திநிலை அல்லது சுத்தநிலை என்று கூறப்படுகின்றது. இந்நிலையில் மலத்தின் தன்மை என்னவென்பதை,

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅநு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பம்கொ டுத்தலிறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள் அப் பா.

என்னும் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள்

ஒன்றான உண்மை விளக்கச் செய்யுள் (௫௦) கூறுகின்றது. இதில் 'இச்சைத விளைவித்தல் மலம்' என்பதற்குப் 'பேரின்பத்தை மேன்மேலும் விளைக்கிறது மலம்' என்று உரையாசிரியர் உரை கூறுகின்றனர். உயிருக்கு அறியாமையையும் துன்பத்தையும் விளைவித்துக் கொண்டிருந்த மலம் எப்படி மேன்மேலும் இன்பத்தைப் பெருகச்செய்து கொண்டிருக்குமென்பது கூடாத காரியம்போல் தோற்றுகின்றது. இதைப் பற்றி நான் பல தடவைகளில் சிந்தித்துப் பார்த்து இதற்கு ஏதாவது உபமானம் கூறமுடியுமா என்று யோசித்து அடியிற் கண்ட முடிவிற்கு வந்தேன். சிவத்திற்கு நெருப்பை உபமானமாகவும், மலத்திற்குக் குளிரை உபமானமாகவும் கொண்டால் முத்திநிலையை ஒருவாறு விளக்கலாம். குளிரினால் வருந்திக் கொண்டிருக்கும் ஒருவன் நெருப்பினை அணுகுவானாயின், குளிர்வருத்தம் நீங்கி இன்ப உணர்ச்சியை அடைகின்றான். அந்த இன்ப உணர்ச்சியும் குளிர் சிறிதளவாவது இருந்தால்தான் உண்டாகின்றது. குளிர் முற்றிலும் நீங்கி விடுமாயின் அந்த இன்ப உணர்ச்சியும் போய் விடுகின்றது. ஆகையால் ஓர் அறையில் இருந்து கொண்டு நெருப்பின் அருகில் குளிர் காய்பவன் ஒருவன் இன்ப உணர்ச்சியை அடைவதற்குச் சிறிதளவு குளிர் அவசியமாகின்றது. அதுபோல் ஆன்மா சிவத்தை அடைந்து பேரின்ப உணர்ச்சியை எப்போதும் அடைந்திருப்பதற்கு மலம் வலி குறைந்து உடன் இருந்துகொண்டிருப்பது அவசியமாகின்றது. மலம்முற்றிலும் ஒழிந்துவிடுமானால் பேரின்ப உணர்ச்சியும் ஒழிந்து போகும். மலத்திற்குக் குளிரை உபமானமாகக் கொள்வது கேவல நிலையிலும் சகல நிலையிலும் உள்ள ஆன்மாவுக்குப் பொருத்தமாக இருக்கின்றது. மிக்க குளிருள்ள பிரதேசங்களில் (Arctic regions) சில பிராணிகள் குளிர் காலங்களில் மிகக் குளிரினால் உணர்ச்சியற்றுச்

செயலற்றுச் சிலமாத காலங்கள் கிடக்கின்றன. இந்நிலையை ஆங்கிலத்தில் 'Hybernation' என்பர். பிறகு வெய்யிற் காலம் குறுகும்போது அப்பிராணிகள் குளிர் பெரும்பாலும் நீங்கி உணர்ச்சி பெற்று எழுகின்றன. அவ்வாறு உணர்ச்சி, செயல்கள் அற்று உயிர் மாத்திரம் பொருந்தியுள்ள நிலையைக் கேவல நிலைக்கும், உணர்ச்சிபெற்றுச்செயல்செய்யும் தன்மை வாய்ந்த நிலையை, ஆன்மா தனுகரணங்களோடு கூடிய சகல நிலைக்கும் ஒப்பிடலாம். ஆகையால் ஆணவத்திற்குக் குளிரை உபமானமாகவும், சிவத்திற்கு நெருப்பை உபமானமாகவும் ஆன்மாவைக் குளிர் காய்பவனாகவும் கொண்டால் கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று நிலையிலும் பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களின் தன்மையையும் சைவசித்தாந்தக் கருத்தின்படி விளக்குவது எளிதாகின்றது.

# *நமது நாடும் கல்வியும்

[S. A. அமிர்தகடேசுவரன் பிள்ளை, வேளாங்கண்ணி]

**நா**வலந்தீவு, பரதகண்டம் எனக் காரணப் பெயரோடு வழங்கப்பட்டு இதுபோது இந்தியா எனப்படும் நம் நாட்டினைத் 'தேவதைகள் நடமாடும் இடம்' என ஏனைய நாட்டவரும் புகழ்வது இந்நாட்டின் பெருமையை நன்கு விளக்கும். இந்நாட்டிற்கு உயிரிடமாயிருப்பது தென்னாடு. தென்னாட்டில் சிவபெருமான் திருவிளையாடல் பல புரிந்து பல நாயன்மார்கட்கருள் சுரந்துள்ளார். 'தென்னாடுடைய சிவனே

*இஃது பனையூர் என்னும் சிற்றூரில் அடியேனால் 1939-ல் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் சுருக்கம்.

போற்றி' என மணிவாசக அடிகள் வாக்கும் இதனை வலி யுறுத்தும்.

இந்நாட்டினர் குற்றமற்ற காப்பிய நூல்களை வாசித்தும் விபூதிசாதனத்தைக் கைக்கொண்டு ஒழுகியும், மாசறுகாட்சி யாராய சிவனடியார்க்கன்புள்ள சிந்தையராய், நிருமலக் கொழுந்தாகிய சிவபெருமானை இடைவிடாது வழிபட்டும் வருவர். சமயமே இந்நாட்டின் உயிர் எனக்கொள்வது நமது மரபாகும். தென்னாட்டில் ஒருவர் பிறப்பதென்றால் முன்னரே அன்னார் அரிய தவமாற்றியிருத்தல் வேண்டும். வீடுபேறடைவித்தற்கு அறிவுறுத்தும் ஒப்பற்ற சிறந்த சித் தாந்தக் கொள்கை நம் நாட்டில் தான் சிறப்புற்று விளங்கு வது யாவரும் அறிந்ததொன்று. இத்தென்னாட்டின் சிறப்பை எடுத்துக் கூறுவதென்றால் எம்போலிகளாலாகாத தொரு செயலாம். தென்னாடு தன்னிடம் வாழும் குடி களுக்குறும் இடுக்கணைக் களைவதால் அரசனையும், இங்கு விளையும் பொருள்களால் நமது உடலையும் உயிரையும் ஓம்பு வதால் அன்னையையும், பொன்னை வரையாது கொடுத்தலால் வள்ளலையும், சித்தாந்தமுத்தி பயப்பதால் சிவஞானதேசி கனையும் நிகர்க்கும்.

" தரும்பய மாற்ற லாலே தந்தையை நிகர்க்கும் தம்பால்
இருந்தன மீகை யாலே ஈன்றவ ளேய்க்கு மெண்ணில்
வரும்படி யளித்த லாலே மன்னவன் மானும் மாட்சி
திருந்துவீ டுதவ லாலே தேசிக னும்தென் னாடு"

எனவும் ஆன்றோர் கூறுவர்.

இத்தகைய சிறப்புற்றோங்கும் நமது நாட்டின் சமயக் கல்விநிலை கவலைக்கிடமானதாகி யாவரும் புறக்கணிக்கும் வகையில் அலமறுகின்றது. இந்நாட்டின் தவப்பயனுக் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் சைவ வினாவிடை முதலாய சைவ நூற்களைத் தெள்ளிய நடையில்

வெளியிட்டும், சைவத்தையொட்டிய பல சொற்பொழிவுகள் ஆங்காங்கு ஆற்றியும் பணிபுரிந்ததன் பயனாக, பலர் கட்குடியையும் ஊனுணவையும் ஒழித்துச் சைவசமயமக்களின் இலக்கணங்களைக் கைக்கொள்ளலாயினர். அதன் பின்னர் பலரும் பற்பல வகையில் சைவப்பணிகள் புரிய முன் வந்தனர்.

சைவசித்தாந்த மகா சமாஜம் இப்பணியில் பலவகையிலும் முன்னணியில் நிற்பது நம்நாடுசெய்த தவத்தின் அரும் பயனாகும் என்பது மிகையாகாது. நாமனைவரும் உடலுக்குழைக்கத் தலைப்படுவது போலவே உயிருக்கு முழைக்கத் தலைப்படல் வேண்டும். நாமனைவரும் நாடோறும் நம் உடலிலுள்ள அழுக்கை நீர் கொண்டு கழுவுகிறோம்; ஆனால் உயிரின் அழுக்கைப் போக்கடிக்க எந்தக்கருவி வேண்டுமென அறிகின்றோமில்லை. அதற்குத் தலைசிறந்த கருவியாவது சித்தாந்த சாத்திரங்களும் தேவார திருவாசகங்களுமேயாம். வழியடியார்களும், சமயகுரவர்களும் காட்டிய வழியே நாம் பின் பற்றற்பாலது. ஏனெனில்:

“அத்துவித மெய்கண்டான் அருணந்தி சம்பந்தன்
முத்தியளி கொற்றவனு முந்திலரேல்—இத்தலத்தில்
அத்துவித மெங்கேசல் லாகமமெங் கேமதப்பொய்க்
கொத்துவித முத்திஎங் கோ?

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுநஞ் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே”

இத்தகையார்கள் புகழுடலாகிய பிறவாயாக்கை பெற்றுச் சிவபிரான் திருவடியிலுற்றனர். ‘யாம் பெற்றபேறு இவ்வையகமும் பெறுக’ என அருள் நோக்கத்தால் நமக்கு இவ்வரிய சாத்திரங்களைச் செய்தனர். இவ்வரிய

நூல்களை முறையாகக் கற்றுச் சிவஞான மடைவதே அப் பெரியார்கட்கு நாம் புரியத் தக்க கைம்மாறு எனலாம்.

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி சேராப்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே"

எனத் திருமந்திரக்காரர் கூறுவதும் இதையொட்டியேயாம்.

சித்தாந்த நூல்கள் விதிவிலக்குகளைத் தெரிவித்து நல்லாற்றி னுய்த்து, நமன் தொல்லை நீக்கி, நாட்டவர் மதிக்கும் நாகரிகம் நல்கி, பொருள் தேட்டமு மீந்து, இன்பமுமளித்து, புகழையும் நாட்டி, செவ்விய வாழ்க்கையின் முறையால் அறத்தையும் பெருக்கி அதனால் வீடுபேறடைய எளிதாக்குகின்றது.

"சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொரு ளாவதால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே."

எனவும் வருவது காண்க.

சித்தாந்த சாத்திரங்களை ஒட்டிய கல்விப் பயிற்சி ஒரு நாட்டிற்கு மட்டும் உரியதன்று. எல்லா நாட்டினர்க்கும், சுருங்கக் கூறின் ஒவ்வோர் உயிருக்கும் இன்றியமையாதது என்பதை யாவரும் ஒப்பாதிரார். இக்கல்விப் பயிற்சி எத்தகையாரின் சமயக் கொள்கைக்கும் தான் பிறப்பிடமாய் விளங்கி நின்று உலகப் பொதுச் சமயக் கல்வியுமாகின்றது. இக்கல்விப் பயிற்சியுடையோரை நாட்டவர் மதிப்பதால் இது நம்மை வளர்க்கும் அன்னை தந்தையை நிகர்க்கும்; அறவழியில் செலுத்துவதால் சற்குருவை மானும்; உடலுக்கு முயிருக்கும் இன்பம் பயப்பதால் அருட்சத்தியை யொக்கும்;

வீடுபேறடைவிக்க வழிகாட்டலால் எல்லாம் வல்ல சிவபிரானைப் புரையும்.

நிலவுலகில் ஒருவர்க்கு ஏற்பட்ட அவயவங்கள் யாவும் குறைவறச் சிறப்புற்று அமைந்திருப்பினும் கண்ணிற்சிறந்த உறுப்பில்லை என்பதை யாவரும் அறிவர். அத்தகைய கட்புலனைத் தூசுபடியவும் பாழடையவும் விட்டுவிடின் கண்ணின் பயனை நுகரல் எங்ஙனம் ஆகும்? இடைநடுவில் ஒருவர்க்குக் கண் கெட்டுவிடில் பழக்க வயத்தால் வழியறிந்து செல்வது ஒரு புடையிருப்பினும், மீண்டும் அக்கண்ணைச் சீர்திருத்த முயலாதார் இல்லை. ஒரு சிலர் கண்ணின்றியு மிருக்கலாம் எனவும், பிறவிக்குருடனும் ஓரளவில் வாழ்க்கை நடத்தவில்லையா எனவும் வெற்றுரை கூறுவது நகுவார்க் கிடமாகு மன்றோ! குருடனின் வாழ்க்கை ஒரு வாழ்க்கையாகுமா?

இஃதேபோன்று நம்நாட்டு மக்களுக்குக் கண்ணே என விளங்குவது சமயக்கல்வியாம். சித்தாந்த நூல்களை அறியாதிருப்போர் கண்ணின்றிவாழ முயலுவோரின் மனப்பான்மையை நிகர்க்கும்.

“கண்ணுடைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.”

“அறம்பொரு ளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்று
உற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.”

நமது நாட்டைக் கைப்பற்றி நம்மை யாண்டுவரும் மேனாட்டினர் நம் நாட்டுக்கலைகளையும் சிறந்த சித்தாந்த நூல்களையும் மொழி பெயர்த்துக்கொண்டு நமது சமயக்கொள்கைகளை ஆராயத் தலைப்படுகின்றனர். சீரிய சைவ மக்களாகிய நாம், யாவற்றையும் பிற நாட்டாரிடம் ஒப்படைத்துவிட்டு

வாளாவிருக்கின்றோம். இதனால் நமது சமயப்பற்றும் குன்றிவிட மொழிப்பற்றையுமிழந்து நாளவம் போக்குகின்றோம்.

"வான்மதி இரவி யுன்றன் வயதெலாம் கொடுபோகின்றான்
தானதை யறிந்தி டாமல் தரணியில் வாழ்வோ மென்றே
ஊனமா ருடலை நம்பி உண்மைகெட் டலைந்தாய் நீமெய்ஞ்
ஞானமே பொருளாம் நாதை நாதனை நினையாய் நெஞ்சே"

என்பனவும் உன்னற்பாலது.

விலக்கியன விடுத்து விதித்தனவே செய்யும் நலத்தகையாராம் சிவனடியார்க் கடியாராய்ப் பிறந்த நாம் ஏதிலரைப் போன்று உரிமை உணர்வற்றுச் சமயக் கல்வியை யோம்பாது புறக்கணித்தல் எவ்வகையிலும் பொருந்தாது. நமது தெய்வீக நாடு முக்காலமும் தெய்வீக நாடாகவே விளங்க வேண்டும். நமது பாடசாலை மாணவர்கள் எவருக்கேனும் சமயத் தொடர்பான கருத்துக்கள் நிறைந்த பாடங்கள் முறையாகக் கற்பிப்பதுண்டா? ஆசிரியர்களிலும் நூற்றுக்கு ஒருவரிருவர் இக்கலையில் வல்லவரா யிருப்பின் அன்னாரை எள்ளி நகையாடாதிருந்தால் போதாதா! கிறித்தவ சமய கழகத்தைச் சார்ந்த பள்ளிகளில் சமயபோதனைக்கெனத் தனியானநேரம் வகுத்துக் கற்பிப்பதுபோன்று, சைவ இலக்கியங்களுக்கு நமது பாடசாலைகளில் தனி நேரம் உண்டா? இதையும் அரசாங்கத்தார் அருளொடு நோக்கிச் செயலில் ஊக்குவாராயின் நமது இளம் சிறார்கள் பெரும் பயன் அடைவார்கள். சமயக் கல்வித்துறையில் நாம் ஈடுபட்டு 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் சைவப் பெரியாரின் வாக்கிற்கு இலக்காகச் செயல் முறையில் காட்டி நம் நாட்டின் மேன்மையை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். நமது சமயக் கல்வி இளவயதிலேயே கற்பிக்கப்பட்டிருப்பின், பல்லாயிரக் கணக்கான

மக்கள் புறச்சமயம் புகுந்திரார். புறநாட்டார் சமயமும், புற நாட்டார் உணவு முறையும், புறநாட்டு மொழி முதலியனவும் நம்மை நம் நாட்டுக்கும், செல்வத்திற்கும், வெகுவாய் சமய நூலுக்கும், இன்னும் புறம்பாக்கி விட்டுவிடாதவாறு சீர் திருத்திக் கொள்ள முயலுவோமாக. இவற்றிற்குச் சைவ மடங்கள் அருந்துணை புரியுமென எதிர்பார்க்கப்படுகிறது. சைவரெனப் பெயர்கொண்டோர், முன்னோர்உரைத்த நூலைப் பொன்னேபோற் போற்றி வருவோமாயின் நம் நாடும் கல்வியும் நலனுறும். நமது சமயத்திற்குகந்தோர் பாதுகாப்புமாகும்.

“ இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும்
வானிரவி எழுந்தா லன்றிக்
கருதுதிலப் பல்பொருளுங் காண்டலரி
தாமுலகிற் கண்போ லியாரும்
பெருகியசெல் வமும்அறிவும் பெற்றாலும்
நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர் புண்யபாவமும் இம்மைமறு
மையும்வீடும் தெரியா வன்றே.”

# திருவாரூரர்

[P. தியாகராஜன், B.A., L.T.]

## XV

## சுந்தரரும் இயற்கையும்

### அ. ஆறுகள்—காவிரி

*" படியிலா வின்பாட்டி லாரூ ரனிவிருப்பன் பரமனென்ப [மன்றி*
*தடியனே னறிந்தனன்வான் றெருழுமீசன் வினைத்தடுத்தாட்கொண்டு*
*தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்காகத் தூதுசென்று [றே."*
*மிடியிலா மனைதொறு மிரந்திட்டு முழன்றமையால் விளங்குமா*

**—சிவப்பிரகாச அடிகள்**

சைவப் பேராசிரியர்கள் ஆகிய நால்வர்களும் சைவத்தை வளர்க்கும் பொருட்டு ஊர்கடோறும் கால்நடையாகச்சென்று ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள சிவபெருமானது வடிவத்தைக் கண்டு வணங்கினார்கள்; தம்மைப்பின் தொடர்ந்து வந்த பல நூறுகணக்கான மக்களையும் வணங்கச் செய்தனர். பலவிடங்களில் இன்னிசைப் பாக்களால் சிவபெருமானைப் போற்றினார்கள். இப்பாடல்களில் கடவுளின் புகழையும் அருளையும் எடுத்துப் பேசினதோடுகூட அவர் கொண்ட எட்டு வடிவங்களுக்குள் அடங்கிய நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி, இருசுடர்கள் எனப்படும் இயற்கைப் பொருள்களையும் மிக அழகாக எடுத்தும் விரித்தார்கள்.

ஆறுகள், மலைகள், பொழில்கள், கடல்கள், மரங்கள், வயல்கள், பொய்கைகள் எல்லாவற்றையும் பற்றிப் பாடுகின்றார்கள். ஆளுடைய நம்பியும் தமது தேவாரத்தில் இயற்கை வளத்தை நேர்ந்தவிடமெல்லாம்

எடுத்து எடுத்து மொழிந்தார். அவைகளில் ஆறுகளே மிகச்சிறப்பாகப் பாடப்பட்டன. "ஆறில்லா ஊர்க்கு அழகு பாழ்" என்று ஔவையார் சொன்னபடி ஆறே ஓர் ஊரைச் செழுப்பிப்பதும் பெருமைப்படுத்துவதும் ஆகும்.

தென்னாட்டில் உள்ள ஆறுகளில் காவிரியே மிகச்சிறந்தது. வடநாட்டிற்குக் கங்கை எப்படியோ அப்படியே காவிரி தென்னாட்டிற்குப் பயனளிப்பது. "தண்ணீருங் காவிரியே" என்ற வாய்மொழி ஒன்றே அதன் பெருமையை விளக்கும். அதன் இருகரையிலும் பல திருவிடங்கள் இருக்கின்றன. காவிரிப்போக்கில் காணப்படும் வளத்தைப் புலவர்கள் பலவாறு புகழ்ந்திருக்கின்றார்கள். காவிரி இருகரையிலும் சோலைகளும் மரங்களும் செறிந்து கண்டோர் மனத்தைக் கவரும் காட்சியினை இன்றும் காணலாம். வானம் பொய்க்காத பண்டை நாளில் அது இன்னும் மிகச் செழிப்பாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

காவிரியாறு, கொங்குநாடு, சோணாடு ஆகிய இரண்டின் வழியாக ஓடுகின்றது. கொங்கு நாட்டில் திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் இடத்தில் காவிரி, மலையினின்றும் கீழ் இழியும் நிலையைக் காட்டுவதுபோலப் பாடுகின்றார். "கல்லையுந்திவளம் பொழிந்திழி" "காவிரிப்பாடு தண்புனல் வந்திழி" "நெருங்கிவண் பொழில் சூழ்ந்தெழில் பெற நின்ற காவிரிக்கோடு" (48) என்னும் தொடர்கள் நோக்கத்தக்கன. இந்தவிடத்தில் காவிரிக்கரை பொழில்கள் சூழ்ந்து அழகுடன் விளங்கினது என்பது தெரிகிறது.

3. 74-ம் பத்தில் திருத்துருத்தி யருகில் காவிரி வளத்தை மிகநன்றாகப் பொறிக்கின்றார். "மின்னுமா மேகங்கள்பொழிந்து இழிந்து அருவிவெடிபடக் கரையொடுந்திரை கொணர்ந்தெற்றும் அன்னமாங் காவிரி அகன்கரை" என்று காவிரியில் நீர்வரும் விதத்தையும் அதன் படுகைகள் அகன்

திருப்பதையும், அது அன்ன மளிப்பதையும் புகழ்ந்தார். அடுத்த திருப்பாட்டில் " கூடுமாறுள்ளன கூடியுங் கோத்துங் கொய்புனல் ஏனலோடைவனம் சிதறி, மாடு மாகோங்கமே மருதமே பொழுது, மலையெனக் குலைகளை மறிக்குமாமுந்தி, ஓடுமா காவிரி" என்று காவிரியின் நீரோட்டத்தின் விசையையும் அந்த விசையினால் தினை, மலை நெல் முதலியவைகளைச் சிதறிக்கொண்டும் கோங்க மரம் மருத மரங்களை மோதியும் மலை போன்ற பெருங் குலைகளை இழுத்துக்கொண்டும் ஓடுவதையும் எடுத்துச் சொன்னார். 3-வது பாடலில் காவிரிநீரின் பெருமையைக் "கொல்லுமாலி யானையின் கொம்பொடுவம்பார் கொழுங்கனிச் செழும்பயன் கொண்டு கூட்டெய்திப், புல்கியும் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும் போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச், செல்லுமா காவிரி" என்று வியந்தார். காவிரிக் கரையோரங்களில் யோகர்கள் உறைந்திருந்ததையும் அவர்கள் விடியலில் நீரில் மூழ்கும் வழக்கத்தையும் குறிக்கின்றார். அல்லாமல் போகரும் காவிரி நீரில் மூழ்குவது நோக்கத்தக்கது. காவிரிநீர் போகருக்கும் நன்மை செய்யும் என்பது இங்கு அறியலாகும். அதனோடு காவிரி நீர்ப் பெருக்கு யானைக் கொம்புகளையும் செழும் பயன் தரும் நன்றாய்ப் பழுத்த கனிகளையும் கொண்டுவந்ததாம். என்னே! ஒருவன் காவிரியில் வரும் இவ்வித உணவுப் பொருளைக் கொண்டே வாழ்க்கை நடத்தியிருக்கலாம் போலும்! எவ்விதப் பொருள்களும் வெள்ளத்தில் வந்தன. நான்காவது பாடலில் இன்னும் அழகிய கருத்துக்களை அமைத்துப் பாடியுள்ளார். ஒரு பெண்ணானவள் தன் கணவன் வீட்டிற்குச் செல்லும் போது பல பொருள்களைச் சீராகக்கொண்டு போவதுபோல் தோன்றுகிறதென்று " காவிரி பொறியுமா சந்தனத்துண்டமோடகிலும் பொழிந்திழிந்தருவிகள் புன் புலங்கவரக்கறியும் மாபிளகொடு கதலியும் உந்திக் கடலுற விளைப்பதே

கருதித் தன்கைபோய் எறியும்" என்று, மிளகு கதலிப் பழம் முதலிய பண்டங்களை ஏந்திக்கொண்டு கடலைப்போய் அடைவதே கருத்தாக விரைந்து ஓடுவதாக விளக்குகின்றார்.

4. 5-வது பாட்டில் காவிரியில் பலவிதமலர்கள் மிதந்து வருவதையும் பலவூர்களிலிருந்து மக்கள் அதன் நீரில் ஆட வருவதையும் பேசுகின்றார். "பொழிந்திழிமும் மதக் களிற்றின மருப்பும் பொன்மலர் வேங்கையின் நன்மல ருந்தி, இழிந்திழிந்தருவிகள் கடும்புனலீண்டி எண்திசை யோர்களும் ஆடவந்திங்கே, சுழிந்திழிகாவிரி" என்னும் தொடரினை நோக்கவும். எப்படி கங்கைக்கு நீராடப் பல நாட் டினரும் இன்று செல்கிறார்களோ அதேபோல பண்டையில் காவிரியில்ஆட எட்டுப்பக்கங்களிலிருந்தும் மக்கள் வந்தனர் போலும். இப்பாட்டில் காவிரியில் பல அருவிகளிலிருந்து நீர்வந்து கலப்பதைச் சுட்டினர். 6-வது பாடலில் காவிரி நீர்கொணரும் பண்டங்களைக் குறிப்பதோடு அந்நீர் ஆடு வோர் தீவினைகளைத் தீர்ப்பதையும் 'புகழுமா சந்தனத்துண் டமோடகிலும் பொன்மணி வரன்றி நன்மலருந்தி, அகழுமா அருங்கரை வளம்படப் பெருகி ஆடுவார் பாவந் தீர்த்தஞ்சனம் அலம்பித், திகழுமா காவிரித்துருத்தியார்" என்று கூறினர். காவிரி நீர் மிகப் புனிதமுடையதென்பது இங்கு உற்றுநோக்கத்தக்கது. ஏன்! ஆடுவார் தீவினைபோக்கும் ஆற்றல் வாய்ந்தது என்று திருவாரூரரே சொல்கின்றார் அன்றோ? ஆனால் காவிரியின் கரையில் பிறந்து வளர்ந்து தீவினையின் பயனால் சிலர் அதனை விட்டகன்று தூம்பினின்று வீழும் நீரில் முழுகிக் களிக்கின்றார்களே! தீவினையின் கடுமை குறைந்த நாளிலன்றோ அவர்கள் காவிரியை மீண் டடைவர். இந்தப் பாடலில் காவிரிநீர் அருங்கரை வளம்படப் பெருகுகிறதென்றார். காவிரியில் கலந்துவரும் வண்டல் பெருவெள்ளத்தின்போது இருபக்கத்திலும் உள்ள அகன்ற

படுகைகளில் படிந்து அவைகளை உரப் படுத்துவதை இன்றும் காணலாம். அந்நிலங்களுக்கு வேறே யாதொரு எருவும் வேண்டியதில்லை. 7, 8, 9-ம் பாடல்களில் மலைகளில் உள்ள பண்டங்களைக் காவிரி அடித்துக்கொண்டு கடல் முகமாக "வரையின் மாங்கனியொடு வாழையின் கனியும் வருடியும் வணக்கியும் மராமரம் பொருது, கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க் காம்பிலி சுமந்தொளிர் நித்திலங்கைபோய், விரையுமாகாவிரி" என்றும் "ஊருமாதேசமே மனமுகந்துள்ளிப் புள்ளினம் பலபடிந் தொண்கரை யுகளக், காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க் கவரிமா மயிர்சுமந்து ஒண்பளிங்கிடறித், தேருமாகாவிரி" என்றும் "புலங்களை வளம்படப் போக் கறப்பெருகிப் பொன்களே சுமந்தெங்கும் பூசல் செய்தார்ப்ப, இலங்குமா முத்தினோ டிணமணி யிடறி யிருகரைப் பெருமரம் பீழ்ந்து கொண்டெற்றிக், கலங்குமாகாவிரி" என்றும் குறித்தனர். இங்கே கருங்கடல் வங்காளக் குடாக்கடலைக் குறித்தது என்பது வெளிப்படை. அதனால் தான் சென்னையின் கீழ்க்கடற்கரையை "கருங்கடற் கரை அல்லது கருமணற்கரை" (Coramandel Coast) என்றும் அழைக்கின்றார்கள். இங்கே காவிரி பொன் சுமந்து வருவதையும் எடுத்துச் சொன்னார். இதனைக் காவிரியில் நீர் ஒரு புறம் வற்றியிருக்கும் அதன் படுகையின் மணலை உற்றுப்பார்த்தால் மின்னுகிற சிறு தூள்கள் காணப்படும். அவை பொன்வகையைச் சேர்ந்தவை. ஒரு நாளில் மக்கள் அவைகளைச் சேர்த்து உருக்கிப் பொன்னாக்கினார்களாம். ஆனால் செயற்கை வைரம் செய்வதுபோல் யாதொரு ஊதியமும் கிடைக்காமையால் அதை விட்டு விட்டார்கள். காவிரியிற் பொற்பொடி வருவதால் தான் அதற்குப் 'பொன்னி' என்ற பெயர் வழங்குகிறது.

5. மேற்குறித்த பதிகத்தில் காவிரியை 'மாகாவிரி' என்றே பலதடவையும் அதன் பெருமை தோன்றப் பேசுகிறார். திருவையாற்றுப் பதிகத்தின் (77) லும் காவிரியின் பெருமையை விதந்தோதுகிறார்: அங்கே காவிரியைத் "திரைக்காவிரி" என்று ஒவ்வொரு பாடலிலும் அழைக்கின்றார். இப்பதிகமானது ஆரூரர் சேரமான் பெருமாளொடு கொங்கு நாட்டிற்குச் செல்லுகையில் திருவையாற்றின் வழியாகச் சென்றபோது பாடியது. அக்கரையிலுள்ள கோவிலுக்குச் செல்லமுடியாதபடி காவிரியில் வெள்ளம்பெருகி அலைகள் நிறைந்து ஓடின. அங்கு காவிரியின் இருகரையிலும் இயற்கை வளம் மலிந்து கிடப்பதை இன்றும் காணலாம். அதனை நேரிற்கண்ணுற்ற எவரும் ஆரூரர் 77-ம் பதிகத்தில் சொல்லியவெல்லாம் உண்மையென உணர்வார்கள். ஆரூரர் "காவி லருவி கமுகுண்ணத் தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை அரவந்திரைக் காவிரிக் கோட்டம்" "பருவி விச்சிமலைச் சாரற்பட்டை கொண்டு பகடாடிக், குருவியோப்பி கிளி கடிவார் குழல்மேல் மாலை கொண்டோட்டம், தரவந் திரைக் காவிரிக் கோட்டம்" என்றும் "வாழைக்குலைத் தெங்கு கொணர்ந்து கரைமேல் எறியவே அழகார் திரைக் காவிரிக்கோட்டம்" "கழைக்கொள் பிரசங் கலந்தெங்கும் கழனி மண்டிக்கையேறி அழைக்குந் திரைக் காவிரிக் கோட்டம்" "வார்க்கொள் அருவி பலவாரி மணியும் முத்தும் பொன்னுங் கொண்டலைக்குந் திரைக் காவிரிக் கோட்டம்" "விதிர்த்து மேக மழை பொழிய வெள்ளம் பரந்து நுரை சிதறி அதிர்க்கும் திரைக் காவிரிக் கோட்டம்" என்றும், "தேசமெங்கும் தெளிந்தாடத் தெண்ணீர் அருவி கொணர்ந்தெங்கும் வாசந்திரைக் காவிரிக்கோட்டம்" "தொழுவார் துயர்போக வாழுமவர்கள் அங்கங்கே வைத்த சிந்தை உய்த்தாட்ட ஆழுந்திரைக் காவிரிக் கோட்டம்" என்றும் பல

வாறு காவிரி நீர்ப் பெருக்கினைப் பற்றி வரைந்தனர். ஆரூரர் சென்றிட்ட நாள் காவிரியில் வெள்ள மிருந்திருந்தது, "மேக மழை பொழிய வெள்ளம் பரந்து நுரை சிதறி அதிர்க்கும் திரைக் காவிரி" என்று கூறுதலிலிருந்து தெரிகிறது. மீண்டும் இப்பதிகத்தில் பல நாடுகளிலிருந்து காவிரிக்கு நீராட வருவதைத் "தேசமெங்கும் தெளிந்தாடத் தெண்ணீர் கொணர்....காவிரி" என்ற தொடரில் குறித்தார்.

6. திருவையாற்றிற்குச் சற்று கிழக்கேயுள்ள சோற்றுத்துறை என்னும் திருவூரின் வழியாக ஓடுமிடத்தில் "கழைநீர் முத்தும், கனகக்குவையும், சுழனீர்ப் பொன்னி" என்று நீரில் சுழல்கள் உண்டாவதையும் பொன் வருவதால் உண்டான பொன்னி என்னும் பெயரையும் எடுத்துச் சொன்னார். திருவிடைமருதூரை அணுகிய இடத்தில் காவிரியை "அரைக்கும் சந்தனமோடு அகிலுந்தி ஐவனம் சுமந்து ஆர்த்து இருபாலும் இரைக்கும் காவிரித்தென்கரை" என்றுபேசினார். இப்பதிகமும் வெள்ளம் பெருகினபொழுது பாடப்பட்டது போலும். காவிரி இருகரையும் இரைந்து கொண்டு போவதாக எழுதுகின்றார். திருப்புறம்பயத்தில் (35) "கலமெலாம் கடன்மண்டு காவிரி நங்கையாடிய கங்கைநீர், புலமெலாம் மண்டிப் பொன் விளைக்கும்" என்று காவிரியில் கலங்கள் ஓடினதையும் அதன் கங்கை நீர்போன்ற நீர் வயல்களில் பாய்ந்து பொன்போன்ற நெல்லை விளைப்பதையும் குறிக்கின்றார்.

# சிதம்பர விலாசம்

[இவ்வகவல் சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும் நடராசப் பெருமான் கோவிலின் அமைப்பையும் அவ்வூரின் மகிமையையும் தெரிவிப்பது. அக்கோவிலில் வேதங்கள், அங்கங்கள், பூதங்கள், ஆகமங்கள், கலைஞானங்கள், புராணங்கள், தத்துவங்கள், புவனங்கள், சுவாசங்கள், நரம்புகள், அக்கரங்கள், சக்திகள், பஞ்சாக்கரம், பதங்கள் இவை இன்னின்னவாகுமென்று விளங்கக் கூறப்பெற்றுள்ளது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. இஃது அரசினர் கையெழுத்து நூல் நிலயத்துள்ள பிரதியைப் பார்த்தெழுதிப் பதிப்பித்ததாகும்.—எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை]

திருச்சிற்றம்பலம்

நிதந்தொறும் புலிமுனி பதஞ்சலி போற்றிய
சிதம்பர விலாச விதந்தனை மொழிந்திடக்
கரமலர் நான்கொடுத் தரமுக மாகிய
நரமுக கணபதி திருவடி பணிகுவாம்.

திருத்தகு மாளிகை பொருப்பெனத் திகழ்தரு
தொல்லை யாகிய தில்லை மூதூ
ராகவு மாசிவ லோகம் பூமிசை
யருட்டிரு நகரா யுதித்து விராட்டுவி
னிதயக் கமலத் துதய மாயின
மாநக ரதனில் ஞானமங் குரித்துச்
சச்சி தானந்த சிற்சபை யாகிய
யிரவுபக லற்ற பரமரக சியத்திற்
காரண மாகிய ஆரண நான்குந்
தோரண கம்பத் தூணதாய் விளங்கின

சுருதி நான்கினுக் கருகுதென் புலத்து
மங்கள மாகிய அங்கமோ ராறு
மூன்று கோணமுந் தோன்ற விருபானு
மறுதா றாக நிறுவி யமைந்தன
மிக்கவங் கத்தின் பக்க மாகவும்
பேதக மிலாத பூதமோ ரைந்துந்
தம்பமைந் தாகவும் பம்ப வமைந்தன
மொய்ம்புற நிறுவிய வைம்பூ தத்தின்
பாங்கர்தென் புலத்து வீங்கிய பெருமை
வழுவிலா கமங்க ளெழுநிலை யாகவு
நாலு கோணமுஞ் சாலவும் விளங்க
விருபத் தெட்டு முருவெடுத் தமைந்தன
இவ்வயி னிடையே திவ்வியம் விளங்கத்
தொண்ணூற் றாறு துவாரம தாகவுந்
தன்னிக ரில்லாத் தத்துவ மிருந்தன
பண்ணமை வாகிய எண்ணெண் கலைகளுந்
தெய்வப் பொதுவினிற் கையதா யிருந்தன
இருநூற் றிருபத்து நாலு புவனமு
மருவிய பலகை வடிவுகொடு பரந்தன
இருபத் தோரா யிரத்தறு நூறு
சுவாச மனைத்துந் தாம்பிர வோடா
யுருவெடுத் தும்பர் மருவி யமைந்தன
வெழுபத் தீரா யிரநரம் பென்ன
அளவி லாதபே ராணி யமைந்தன
ஆணியொன் றுக்கு வளவில்பஞ் சாக்கர
மூணி யூணியவ் வோட்டிடைக் கரந்தன
வுற்ற வைம்பத் தோரட் சரமும்
பொற்றக டாகப் பொதுநடு விளங்கின
தாவில் பெருமைச் சத்தியொன் பதின்மருந்

தூவிக ளாகத் துலங்க விருந்தனர்
வருக்கமைந் தாகிய திருக்களிற் றுப்படி
யடியினில் நகரமு மதன்மேன் மகரமு
நடுவினிற் சிகரமு நான்கினில் வகரமும்
யகர முடிவா மைந்தக் கரமும்
பஞ்சாக் கரத்திருப் படியென வமைந்தன
வுன்னுதற் கரிய பொன்னம் பலத்தினிற்
புகலருஞ் சூதர் புராணமீ ரொன்பது
நிகரில்தூ ணாக நிரைபெற நின்றன
எண்ணரும் பதங்க ளெண்பத் தொன்றுந்
தண்ணறுங் கமலத் தட்டதாய் விளங்கின
திருநட சபையிதன் றெக்கிண மதனுட்
சலமி லூர்த்தவ தாண்டவம் புரிந்தன
சிற்சபைக் குணபாற் றிவ்வியம் பொருந்தித்
தேவ சபையெனத் திகழொளி விளங்கிப்
பேரம் பலத்தின் பெருமையள வில்லன
உத்தர திசைதனில் வித்தக மாகிய
திருமூலத் தான தெரிசனை யாவன
பொன்னம் பலத்தி னன்னெடு வாய்தலில்
மருமலர்க் குழலா டிருமகள் கேள்வன்
சங்கர பாணி துங்கநெடு மாயோன்
பொருவரும் பெருமை யொருதனி முதலோ
னுடிய சேவடி நாடி யறிவுறக்
கோல மாநெடுங் காலந் தேடியு
மறியா மையினு லறிவுமே விட்டே
ஊர்த்த நற்சபை பார்த்து வியப்புற்று
மூவடி யளந்த சேவடி நீட்டிப்
படிமுடி தோய அடிமலர் சிந்தித்துப்
பரவி யன்பொடு பணிந்தே கிடந்தனன்

சிற்சபை வாய்தலிற் பச்சிம திசைதனிற்
புண்டரி கப்பதங் கொண்ட மாமுனி
மன்று ணடன நின்றுதெரி சிப்பன்
பன்மணி நெடுமுடிப் பதஞ்சலி மாமுனி
குடபா லங்கடங் கும்பிட் டிருப்பன்
மாலய னிந்திரன் வானவர் முனிவர்
வேத கீத நாத முழக்கவு
மரகர வென்று கரமலர் கொட்டிப்
பதம்பெயர்த் தாட்டி விதம்வித மாகவு
முரையது குழறி யுடலங் கம்பித்துக்
கண்கடா ரைகளாற் றண்புன லொழுக
நீங்காத் தெரிசனை பாங்குபெறச் செய்யு
ஞானமன் றதனில் மானிடப் பிறவியில்
வருமுயிர் களுக்குப் பருவபக் குவங்கள்
வந்த காலையிற் சிந்தையின் புற்றுத்
தாக மாகிய மோக நாயகி
வாழ்வு தருமுயிர்க் கேள்வனை நாடி
வருவது போல இருவினை யொப்பு
மலபரி பாகம் வந்த காலையிற்
சிதமுஞ் செப்பு மசிதமுங் கலந்து
திரையென விருந்த திரோபவ நீக்கிப்
பரவெளி காட்டி யுருவெளித் தோற்றிச்
சிகர மாகிய சிறுதுடிக் கையும்
வகர மாகிய அழல்வீசு கரமும்
யகர மாகிய அபய வத்தமு
மயங்கி நகர மாகிய பாணியு
மொருமுயல் மவ்வி லூன்றிய பாதமு

நன்னய மாகிய சின்மய விளைவாய்த்
திருவருள் சொலிக்கு மொருமல ரடியு
மவ்வுள வாகிய திவ்விய வுதரமுஞ்
சிகர நின்று திரள்பணைப் புயமும்
வகரம தான வதனமண் டலமும்
யகர மாகிய வணிமலர் முடியும்
பிரணவ மாகிய பிரபையு மதன்மேல்
மருவி யக்கர வளரொளிச் சுடர்களும்
வாம பாக மரகத வடிவா
யிமைய மீன்ற வுமையவள் பொலிவுடன்
மாதுபா கத்தை மலர்க்க ணாடவுங்
கோலங் கொண்டுநின் றாலமர் கடவுள்
பாதச் சிலம்பொலி வேத மிழற்ற
வலக்கை டமருக மாய்கை யறுத்திட
இடக்கை யக்கினி யிருவினை யெரித்திட
வொருபத மலத்தி லூன்றி மிதித்துத்
திருவரு ளாகிய வொருபத மெடுத்துக்
குடமுழ விரட்டலிற் கடலொலி கரப்பத்
துளைவளை முழக்கலின் மழையொலி யிரிபட
மாமறை யோதிப் பூமழை பொழிந்துநின்
றமரரு முனிவரு மரியுட னிந்திரன்
பிரமருங் காண்டகு பரம நாடக
மாடிய பொதுவி னளவிது வாகு
மத்திருச் சபைசூ ழாவர ணத்திற்
குடதிசை வாய்தலிற் கடகரி முகவன்
னேச னாகிய பாச வங்குசன்
ஒருவிரல் சுட்டித் திருமுறை காட்டுங்

குணபதி யாகிய கணபதி யிருப்பன்
சிற்சபை வடபாற் செப்பரும் பெருமை
வாய்வுகோ ணத்திற் றூய்சிவ காமி
மன்னிய திருவருட் சந்நி தானமு
மச்சந் நிதியி லமர்சிவ கங்கையுந்
தெளிபுனற் சிவகங் கைக்குமேற் குணபா
லெழில்பெற விளங்கிய ராச சபையு
மண்டச் சுவரெனக் கொண்டதிரு மதிளு
மேலவர் நெருங்கிய நாலு வாய்தலிற்
பொன்னெடு மேருப் புவியினிற் றோன்றிய
தென்னவுஞ் சிறப்புற் றெழுந்தகோ புரங்களும்
பச்சிம வாய்தலிற் செச்சை யணிபுய
னமரர்சிறை மீட்ட குமர நாயகன்
சுடர்விடு கதிர்வேற் கடவு ளிருப்பன்
அளப்பரும் பெருமையின் மகத்துவ மாகிய
தில்லை மாநக ரெல்லை காண்கினு
மெளப்பொழு தாகினு முளப்பட நினையினு
நேச மாகவு நாவினாற் பேசினுஞ்
சிதம்பர மென்றசொற் செவியினிற் கேட்பினு
மிறையினைக் கொடுக்கும் பிறவி சாகரக்
கருவடி யறுத்துத் திருவடித் தாமரை
நீழலில் வாழ்வது நிச்சயந் தானே.

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

**திருச்சதகம் - ஆநந்தத்தழுந்தல் - எழுபத்து ஏழாவது பாட்டு**

*எய்தலாவ தென்றுநின்னை யெம்பிரானிவ் வஞ்சனேற்*
*குய்தலாவ துன்கணன்றி மற்றொ ருண்மை யின்மையிற்*
*பைதலாவ தென்றுபாது காத்திரங்கு பாவியேற்*
*கீதலாது நின்கணொன் றும் வண்ணமில்லை யீசனே.*

*எம்பிரான் நின்னை எய்தலாவது என்று, இவ்வஞ்சனேற்குய்த லாவ துன்கணன்றி மற்றொருண்மை இன்மையில், ஈசனே பாவி யேற்கு பைதலாவது என்று பாது காத்திரங்கு, ஈதலாவது நின்க ணொன்றும் வண்ணமில்லை என்று உரை நடை செய்து பொரு ளுரைத்துக் கொள்க.*

பதவுரை :—*எம்பிரான் - அடியார்களுக்குத் தலைவனே,*

*நின்னை எய்தல் ஆவது - நான் நின்னோடத்துவிதமாய்க் கலந்தின்புறுவது (ஆனந்தத்தழுந்தல்) உண்டாவது, ஆவது - உண்டாவது,*

*என்று - எந்தக்காலம் ?*

*இவ்வஞ்சனேற்கு - உலக வாழ்வில் பற்றுவைத்துக் கொண்டு உழல்கின்றவனாகிய எனக்கு,*

*உய்தல் ஆவது - இவ்வுலக வாழ்வுப்பற்றிலிருந்து தப் பிப் பிழைத்தல் உண்டாவது,*

*உன் கண் அன்றி - எவ்வாற்றானும் மெய்ப்பொருளா கிய (சத்துப் பொருளாகிய) உன்னிடத்தில் அத்துவிதமாய்க் கலந்து நின்னைச் சேர்ந்தாலல்லாமல்,*

*மற்றோர் உண்மை இன்மையின் - மற்றும் ஓர் மெய்ப் பொருள் இல்லாத ஏதுவால்,*

ஈசனே - என்னை ஆளுகின்றவனே,

பாவியேற்கு-உலகப்பற்றுடைய பாவியேனாகிய எனக்கு,

பைதல் ஆவது என்று-நீ இரங்கி அருள் செய்யாவிட்டால் பிறவித்துன்பம் உண்டாகுமென்று நினைத்து,

பாதுகாத்து இரங்கு-நீ என்னைக் காப்பாற்றும்பொருட்டு என்மேல் இரக்கம் வைத்து அருள்செய்வாயாக.

ஈது அலாது - இங்ஙனம் நீ என்மேல் இரக்கம் வைத்து அருள் செய்தாலன்றி,

நின் கண் ஒன்றும் வண்ணம் இல்லை - நான் நின்னிடத்தில் அத்துவிதமாய்க் கலந்து நின்னைச் சேர்ந்து இன்புறும்வகை மற்றொன்றில்லை.

விளக்கஉரை :—வஞ்சனேற்கு - வஞ்சனேன் + கு-கு நான்காம் வேற்றுமை உருபு. பின் வருகிறபாவியேற்கு மென்றதும் இவ்வாறே வந்தது. வஞ்சனேன் என்பதும் பாவியேன் என்பதும் ஒரு பொருளென மெய்ப்பொருளாகிய சிவபெருமானிடத்தில் பற்றுவையாது பொய்யான உலகவாழ்வில் பற்றுவைப்பதை வஞ்சமென்றும் பாவமென்றும் அடிகள் கூறுகின்றார்.

மற்றோர் உண்மை இன்மையின் - உண்மை என்பது இங்கே உண்மைப்பொருளைக் குறிக்கிறது. ஆகுபெயர். பதி பசு பாசம் முப்பொருள்களில் பதிப்பொருளாகிய சிவபெருமானே எவ்வாற்றானும் என்றும் மெய்ப்பொருளாயிருத்தலினாலும், சத்து அசத்துப் பொருளாகிய உயிர் அவனைச் சேர்ந்தாலன்றிப் பாசத்தைக்கடந்து இன்புறுதல் கூடாமையினாலும் உய்தலாவ தென்கணன்றி மற்றொருண்மையின்மையின் என்றார்.

பைதல் ஆவது என்று - பைதல் - துன்பம், அதாவது பிறவித்துன்பம். ஆவது - உண்டாவது. என்று - பிறவித் துன்பம் உண்டாகுமென்று (எண்ணி)

ஈது - இது. அதாவது மேலே சொன்ன பாதுகாத்திரங்குதலாகிய இது,

ஒன்றும் வண்ணம் - அத்துவிதமாய்க் கலந்து இன்புறும்வகை உலகத்தைச் சார்ந்து பொய்ப் பொருளாயும் (அசத்துப் பொருளாயும்) சிவனைச்சார்ந்து மெய்ப்பொருளாயும் (சத்துப் பொருளாயும்) இருக்கும் இயல்புடைய உயிருக்கு என்றும் ஒரு நிலைத்தான மெய்ப்பொருளாயிருக்கிற சிவனைச்சார்ந்தன்றிப் பிறவித்துன்பம் நீங்கிப் பேரின்பமடைதல் கூடாதென்பதும், அங்ஙனம் உயிர் பேரின்பமடைதற்கு அதனிடத்தில் சிவன் பேரிரக்கங் கொண்டு அருள் செய்தல்வேண்டும் என்பதும் இப்பாட்டின் கருத்து. அடிகள் இப்பாட்டிற்கு முன்னுள்ள ஆறு பாட்டுக்களிலும் இக்கருத்தை உடன்பாட்டுவகையில் கூறி, இப்பாட்டில் உலக வாழ்வில் பற்றுவைத்துழலும் நம்மனோர் அறியும் பொருட்டுத் தம்மேல் வைத்து எதிர்மறைவகையில் கூறுகின்றார்.

# அறமது செய்யார் அரனை நினையார்

[ஜி. சுந்தரமையர்]

தமிழ் வேதமாகிய திருக்குறள் எதிர்மறை முகத்தாலும் உடன்பாட்டு வகையாலும் அறத்தின் இயல்பை இரண்டு குறள்களினால் கூறுகின்றது. இவ்விரண்டையும் இரண்டு மணிகளுக்கு ஒப்பிடலாம். ஒன்று செம்மணி; மற்றொன்று வெண்மணி. மனத்தின் கண்ணுள்ள அழுக்கை மாற்றிச் செம்மை செய்தலின் பயனாய்க் கிடைக்கப்பெற்ற மனோநிலை தான் அறநெறி நிற்போருக்கு இன்றியமையாததாகும். மனம் களங்கமற்ற ஸ்படிகம்போன்ற தூய்மையை

அடைந்தால் அம்மனத்தைக்கொண்ட இவ்வுடல் செம்மேனி யாகும்.

"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்"—இக்குறளை செம்மணி என்று நான் கருதுகிறேன். பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கு தீக்குணங்களும் மனிதனைவிட்டு ஒழிய வேண்டும். இந்நான்கில் ஒன்று மனிதனை ஆட்கொண்ட காலத்தில் அவை தவறென மனிதன் தனது புத்தியால் அறிந்து தெளிந்து அவைகளை உறுதியுடன் கடிந்து அவைகளைத் தன்னை விட்டலகச் செய்யவேண்டும். அடங்கியவைகள் மறுபடியும் கிளம்பலாம். தோன்றும் தோறும் கடிந்து அகற்றவேண்டும். இந்த விதமாய் முயற்சிப்பதே அறநெறி நிற்பதாகும். இத்தீக்குணங்களோடு உழன்று திரிபவன் அறமது செய்பவன் ஆகான்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம், ஆகுல நீர பிற"—இக்குறள் வெண்மணி என்று நான்கருதுகிறேன். ஸ்படிகத்திற்குக் குணமில்லை; மாசற்றது. தூய்மையுள்ளது. சுயம்பிரகாஸமுள்ளது. பிற பொருள்களின் சேர்க்கையால் பாதிக்கப்படாதது. ஆகவே மாசற்றமனம் வாய்ந்தவன் உலக வாழ்வில் அமைந்திருப்பினும் பிரபஞ்சச் சேற்றில் உழலும் பிறரைப்போல் மதிமயங்கிப் போகான். உலகம் அவனை ஒன்றும்செய்யவொண்ணுது. அவன் அறநெறியில் நின்று என்றும் பிறழான்.

மேலே கண்ட உண்மைகளின் சாரத்தை வள்ளுவனூர், "மெய்யுணர்தல்" என்னும் அதிகாரத்தில் "காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன், நாமம் கெடக்கெடும் நோய்," என்ற குறளால் வற்புறுத்துகின்றூர். ஆகவே அறத்தின் வழி நிற்பதின் முக்கிய நோக்கம் வினைப் பயனுல் உண்டாகும் பிறவிப் பிணி மனிதனைத் தொடரா திருப்

பதற்கே என்பது பெற்றும். பிறந்து பிறந்து இறப்பதூஉம் இறந்து இறந்து பிறப்பதூஉம் தீராத நோய் என்று ஆன்றோர் கருதுகிறார்கள். பனுவல்கள் துணிபும் அதுவே. தீரா நோய் ஒழிந்து தீர்வதே ஒரு வகையில் முத்திப் பேறுகும். மனத்தின் கண் மாசு படர்ந்திருக்கும் போதும் அல்லது உள்ளத்தின்கண் அழுக்குகள் சிறிதேனும் தங்கியிருக்கும் வேளையிலும், அதை உணராது வெளி ஆடம்பரத்திற்காகப் பல அறங்கள் செய்வதினாலும்,நோன்புகள் நோற்பதினாலும் பயனில்லை என்பது தெளிவு.

ஆனால் தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் ஆத்திச்சூடியில் விளக்கியிருக்கும் "அறனை மறவேல்" 'அறஞ்செய விரும்பு,' என்னும் வாக்குகளைத் தவிர, "ஈதல் அறம்" என்கிற உன்னதமான அவ்வம்மையாரின் நன்மொழியை நமது தமிழ்நாட்டிலே கல்வி கேள்விகளால் சிறந்தவர்களால் அறம் யாதெனப் பேசுங்காலை மேற்கோளாக எடுத்துக் காட்டப்படுவதை யாம் அறிவோம். மேற்கொண்ட குறள் மொழிகளையும், இவ்வாக்கையும் ஆய்ந்து நோக்கின்,ஈயும்பொழுது பொறாமை ஆசை, கோபம், இன்னாச்சொல் முதலியனவின்றி இனிய முகத்தோடு இருக்கும் தன்மையை அடையவேண்டுமென்ற முடிவுக்கு வருவதே தகைமை. பழைய தமிழ் நூல்களைப் படிக்கும்போது நமது பழைமையான தமிழர்கள் ஈவதையே வாழ்வின் பயனெனக்கருதினார்கள். ஈதலில்லாத் துன்பத்தை இறத்தலைக் காட்டிலும் பெரிய துன்பமாகக் கருதினார்கள். என்று தெரிகிறது. "இன்மை உரைத்தார்க்கது நிறைக்கவாற்றாக்கால்,தன் மெய்துறப்பான்,"என்பது கலித்தொகை. ஈதலை வியாபாரமெனக் கருதுதல் முற்றிலும் தவறு. "இம்மைக் செய்தது மறுமைக்காமெனும், அறவிலை வாணிகன் ஆயல்லன்," என்பது புறநானூறு. இரப்போர்கள் வராவிடின் அந்நாள்கள் கெட்ட நாள்கள் என்று நினைத்தார்கள்

நமது பெரியோர்கள். பசிக்கு உணவு ஈதலைத் தலை சிறந்ததாக நினைத்தார்கள் நமது பெரியோர்கள். "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தாரே," என்பது மணிமேகலை. "பசித்து வந்தே, ஏற்கு மவர்க்கிட வெள்ளி னெங்கேனு மெழுந்திருப்பார்" என்ற அருணகிரியார் கண்டவிந்தையைப் பழைய நூல்களிற் காண்பது அரிது.

ஆகவே, மனத்தின்கண் மாசிலனாதற்குச் சிறந்த நேரானவழி, ஈதல் என்னும் குணத்தைக் கடைப்பிடித்து அதை வளர்ப்பது தான். இவ்வுண்மையை நமக்கு வெளிப்படுத்த உத்தேசித்தே அருணகிரியார் கந்தர் சந்நதியில் பின் வருமாறு பாடியிருக்கிறார்: "சாகைக்கு மீண்டு பிறக்கைக்குமன்றி தளர்ந்தவர்க்கொன், றீகைக்கென விதித்தாயிலையே !"

நமது பண்டைப் பெரியோர்கள் வாழ்ந்து வந்த விதத்தையும், அவர்கள் மனப்பான்மையின் பெருமையையும் நூல்களில் படிக்கும்போது நம்மையறியாமலேயே ஒருவிதமான மனக்கிளர்ச்சியுண்டாகிறது. ஆனால் இக்காலத்தின் நிலைமை மாறுபட்டிருக்கிறது. பழைய ஒழுக்கங்களையும் வழக்கங்களையும் அனுசரித்தல் கேலிக்கிடமாயிருக்கிறது. மேலும் அவைகள் தவறென முற்றிலும் ஒதுக்கவும் முடியவில்லை. பழைய சாதனங்களைக் கைக்கொண்டு தற்காலத்தில் முன்னேற வழியில்லையெனப் பலர் கருதுகின்றார்கள். புதிய புதிய சாதனங்களை அனுசரிக்கத் தலைப்பட்டு, பல துறைகளில் பலவிதமான பரீசீலனை நடந்து வருகிறது. எப்படி யெல்லாம் முடியுமோ, ஒன்றும் சரியாய் விளங்கவில்லை. இத்தகைய நெருக்கடியான சமயத்தில் அறம் செய்ய முயற்சிப்பதற்கும் அறனை நினைப்பதற்கும் எவ்விதத்தில் முடியும் என்றும் சிலர் ஏங்கிப் பெருமூச்சுவிடுகின்ற

னர். காலத்தின் கோலத்தையும் விந்தையையும் எழுத முயன்றால் விரியும்.

ஈசனை நினைப்பதற்கும் அவன் அருளைப் பெறுவதற்கும் தக்க வழியைத் தெரிந்து உணர்ந்து அதில் நிற்பதே தகைமை. அறவழி நிற்பின் அவனருள் கிட்டுவது சுலபம். உண்மையும் அதுவே. ஈதலை வாழ்நாளில் சிறுகச் சிறுகப் பேணிவந்தால் எல்லாம் சரியாய்விடும் என்றுரைப்பின் மிகையாகாது. உலக உபதேசமாக அருணகிரி வள்ளல் கந்தரலங்காரத்தில் பின்வருமாறு உண்மைகளை விளக்கினார்.

" பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்டதி டாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே "

மக்களே ! கடைசிப் பயணம் தெற்கு நோக்கிச் செல்லும் போது துணையாய் வருவது யாதோ ? உள்ளபோது கொடுமின்: அதுதான் மெய்த்துணை யென்றும் அத்துணை வேலன் அருள் போல் மாண்புடைத்து என்றும் எச்சரிக்கிறார்.

" தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்று
மிடுங்கோளி ருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே. "

இச்செய்யுளிலும் அருணகிரியார் மனிதருக்குப் புகட்டும் உபதேசங்களின் ஒன்று "தான மென்று மிடுங்கோள்" என்பதே. ஆகவே, ஈதலின் பயன் ஈசனருளைக் கூட்டுவிக்கும் என்று கண்டோம்.

அரனை நினைந்து தளர்ந்தவருக்கு—" துவ்வாதவற்கும் * * * இல்வாழ்வான் என்பான் துணை "—இயன்றதை

ஈதலே மேன்மையான வாழ்வாகும். நேரான வாழ்வும் அது தான். ஈதலுக் கொன்றும் இலையேல் அரனையாவது நினைந் திருப்போம். "எத்தான் மறவாதே நினைக்கின்றேனை மனத் துன்னை" என்ற தேவார மொழிகளைக் கருத்தில் வைப்போ மாக. 'கொடுப்பதற்கு வகையில்லையே! ஈசா என்செய்வேன்! உன் அருள் வசம் இது தானே!' என்று ஏங்கி இரங்கி அழுது தொழுது வழிபட்டு வாழ்நாளைக் கழிப்போமாக.

அருளின் வழி ஒழுகும் முறை அறமாகும். உலக இன் பத்தை நுகர இம்முறை நிற்க எண்ணாது, அறநெறி நிற்ப தற்கே இம்மனிதப் பிறப்பு நமக்கு வாய்த்த தென்றெண்ணி இயன்றதை மிகவும் நுண்ணிதேயாயினும் கரவாமலும் ஈவதை விலக்காமலும் வாழ்வோமாக.

கடவுளை அரனென நினைப்பின் கிடைக்கும் பயன் ஒப் பற்றது. பாசம் விலகும்; ஆணவம், கன்மம், மாயை என் னும் மலங்கள் நீங்கும். பிணிப்புகளும், கட்டுகளும் பந்தங் களும், அழுக்குகளும் முதல் முதலில் நம்மைவிட்டு அகல வேண்டுமல்லவா? இவ்விடர்கள் ஒழிந்த பின் அருள் விளக் கம் உண்டாகும். தன்னை அறிதலும் அவனை உணர்தலும் அருள் விளக்கத்தின் பயனாகும். அதுதான் ஞானம். அவனைச் சதா உணர்ந்து எல்லாம் அவன் செயல் என்று தெளிந்து நிற்பதும், அவனுக்கே உடல், பொருள், ஆவியா கிய யாவும் தந்து அவனடிக்கீழ் கிடப்பதுமே முடிவான கதி யாம். அரனை நினைந்து கசிந்து கசிந்துருகி அறத்தில் நிற் போமாக, சுபம்.

# சிவ சொரூபம்

[சுதுமலை பிரமஸ்ரீ ச. பொன்னுச்சாமிக் குருக்கள்]

## சிவபெருமான் ஆயுதங்களைத் தரித்தவராயும் பெண்ணையுடைய வராயும் உள்ளவர் ; அவர் யாங்ஙனம் கடவுட்டன்மை யுடையவர் என்பனவற்றிற்கு நியாயம்.

திரிசூலம், பரசு, கட்கம், வச்சிரம், அபயம், சர்ப்பம், பாசம், அங்குசம், கண்டை, அக்கினி என்பன சிவபெருமானது ஆயுதங்களாம். இவற்றுள்ளே திரிசூலமாவது ஆரிணி, சனனி, ரோதயித்திரி என்னும் மூன்று சக்திகளைக் காட்டும். திரிசூலத்தை ஏந்துதல் இந்த மூன்று குணங்களும் அவரிடத்துள்ளன வென்பதைக்காட்டும். மழுவாகிய பரசு வாய்மையென்னும் குணவடிவமாம். அவருடைய பிரதாப (உயர்ச்சி) குணமே கட்கமாம். கட்கம் - வாள். எவ்விதத்தாலும் வலிந்து போதிக்க முடியாத அவருடைய இயல்பு வச்சிராயுதமாம். ஆன்மாக்கள்மேல் வைத்த அநுக்கிரகக் குணமே அபயமுத்திரையாம். குண்டலிசக்தி என்னும் சுத்தமாயையே நாகமாம். பிரபஞ்சகாரணமான மாயையே பாசமாம். விவர்ணமே அங்குசமாம். சுத்த மூலமான நாதமே கண்டையாம். பாசங்களைத் தகிக்கும் அவருடைய அருட்குணமே அக்கினியாம்.

சிவபெருமான் ஆன்மாக்களின் பாசபந்தத்தை நீக்கி முத்தி கொடுத்தற் பொருட்டுத் தம் அருட்குணங்களாகிய வடிவமும், மேலே சுட்டிய பொருள்களாகிய பத்து ஆயுதங்

களும் உள்ளவராயிருப்பர். ஆன்மாக்கள்மேல் வைத்த இரக்கமாகிய அருளே உமையென்னுஞ் சத்தியாம்.

ஆன்மாக்களிடத்து இவ்வருட்குணங்களோடு எழுந்தருளியிருந்து பாசபந்தம் நீக்கி முத்தியருளுதல் அவர் கொள்ளும் அருள் வடிவின் பிரயோசனமாமென்பது இக்குறிப்புரைகளில் நன்குணரக் கிடக்கின்றது.

ஆரிணி, சனனி, ரோதயித்திரி என்னும் மூன்று சக்திகள் அவருக்குக் காரணங்களாயுள்ளன. சர்வ சங்கார சாமர்த்தியத்தையுடைய அவருடைய சக்தி ஆரிணியென்று சொல்லப்படும். மாயையிலிருந்து காரியரூபமாய்த் தோன்றும் இயல்பினையுடைய உலகத்தினது தோற்றத்துக்குக் காரணமாயுள்ளதும் அளவிறந்த பிரகாசத்தையுடையதுமான சக்தி சனனி என்று பெயர்பெறும். ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்றபயனாகிய போகங்களை அவ்வவ்வான்மாக்கள் அனுபவித்தொழிக்கும்படி நியமிக்கப்படுஞ் சத்தியானது ரோதயித்திரி என்று சொல்லப்படும். இந்த மூன்று சக்திகளும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் அவரது வடிவத்திற் பொருந்தியிருக்குமென்பதையும் ஊன்றி நோக்குக. விரிப்பிற் பல்கும்; விரிவைத் ததீசியுத்தரத்திற் காண்க.

—இந்து சாதனம்

# இரண்டாவது

# தேவர்களைக் குறித்த வியாசம்

[பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்]

சிஷியன் :—சென்ற தினம் தேவர்கள் பதியில் வாழும் தேவர்களென்று தாங்கணுவன்றதற்கு விவரமென்ன ?

குரு :—அமரர் கற்பத்திற்கு ஆண்டகையாகிய ஆகண்டலன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும், சத்திய லோகத்திற்குத் தலைவனாகிய தமனியனாதியரும், வைகுந்த பதவிக்கரையனாகிய மாதவனாதியரும், உருத்திர பதிக்கு நாயகனாகிய உருத்திரன் முதலியோரும், மகேசுவர பதிக்கு அதிபனாகிய மகேசுவரன் முதலியோரும், சதாசிவபதிக்கு இறையாகிய சதாசிவன் முதலியோரும், மற்றும் தெய்வீகத் தன்மை பொருந்தினோரும் தேவர்களாவார்கள்.

(2) சி :—அந்தத் தேவர்கள் அப்பதிகளில் எதற்காக ஏற்பட்டிருக்கின்றனர் ?

கு :—சர்வேசுவரனுடைய பஞ்சகிருத்தியங்களாகிய, (1) சிருஷ்டி, (2) திதி, (3) சங்காரம், (4) திரோபவம் (5) அனுக்கிரகம் என்னும் ஐந்து தொழில்களால், சகல லோகங்களையும் பேதா பேதமின்றி, நீதியாய் நடாத்த ஏற்பட்டிருக்கின்றனர்.

(3) சி :—அவ்வைந்து கிருத்தியங்கட்கும் சர்வ வல்லமையுடைய சர்வேசுவரனொருவன் நித்தியமாயிருந்து கொண்டிருக்க வேறு தேவர்களிருந்து நடாத்த வேண்டியது அவசியம் இன்றே; ஆதலால் அவ்விதம் உண்டென்று தாங்கள் தீர்மானிக்கிற அத்தேவர்கள் இருக்கிறார்கள் என்பதை நம்பற்கு நியாயமென்ன ?

கு :—நீ எதைத்தான் லேசாய் நம்புகிறாய், இதை நம்பற்கு. ஆயினும் நின் சந்தேக விபரீதத்தைப் பரிகரிக்க வேண்டியது நங்கடமைதான். கேள் ! ஒரு நகரத்துக்கு அதி

னுயிருந்து அங்கங்களைத் தன்னைக்கியமாய் ஆளும் அரசன் தன்னிடத்துள்ளார் எவரையும் நிஷேதஞ்செய்து (விலக்கி) ஏகனாயிருந்து எத்தொழில் புரிவன் எத்தன்மையாவன் என்பதை உற்றுணர்வாயேல் யாஞ்சொற்றது மித்தன்மைத்துள வென்றருத்தமா மன்றோ.

(4) சி:—யானைக்கும் பானைக்கும் சரியென்று தீர்த்தால்போல தீர்க்கின்றீர்கள். அவ்வரசனைப் போலவா தேவன்? அவர் சர்வ வல்லமையுடையவராயிற்றே! அவருக்கு வேறொருவர் துணை யாதுக்கு?

கு:—சர்வ வல்லமையுடையரேனும் பஞ்சகிருத்தியங்களை அவர் நேரே வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமின்றென்பதாய்த் தேவர்களுடைய தீர்மானத்திற்குள் வைத்திருக்கிறார் என்பதற்குப் போந்த பிரமாணங்களுண்டு. அவற்றுள் ஒன்றைப் பகர்கின்றேம். நம்முடைய சரீரத்தில் ஹிருதயமானது பிரதானமாயிருந்தும், அஃதொரு கருமஞ்செய்கவெனின் இந்திரியங்களை யேவல் கொண்டு முடிக்கின்றது. இஃது கிரமமுறையாயிருப்பது போலச் சர்வேசுரன் தன்னுலாகும் அனைத்திற்கும் தலையாயிருந்து கொண்டு தன்னீதிவழி பிரேரித்தல் தக்கது.

(5) சி:—அத்தேவர்களைக் கொண்டு அவ்வைந்து தொழிலும் பிரேரிக்கப் படுவதேல், அவ்வைவர்களாகத் தானேயிருக்க வேண்டும்? அபரிமிதமாக தக்காரணம் யாது?

கு:—ஒவ்வொரு காரியம் புரிதற்கு ஒவ்வொரு எண்ணம் வேண்டுதல் போல் அவரவர்களானுகைக் குரிய பரிக்கிரக விநோத விளையாட்டுக்குத் தகுமாறு அப்படிப் பல தேவர்களும் ஏற்பட்டனர்.

(6) சி:—அப் பஞ்சகர்த்தாக்கள் எத்திறங்கொடு அத்தொழிலியற்றுகின்றனர்?

கு:—அஃது எம்பிரானாகிய ஈசுவரன் றிறங்கொடு.

(7) சி:—அப்படியாயின், அவர்களைத் தேவர்களென்று உயர்த்துவானேன்?

கு :—சித் ரூபமாய் விளங்கிய ஈசுவரப் பிரதி பிம்பர்களாகிய பஞ்சகர்த்தாக்கள் ஜாக்ர சொப்பன சுழுத்தி துரிய துரியாதீதம் வரை ஒன்றிற்கொன்று விசேஷித்து, காலத்திரய வர்த்தமானத்தோடு பிரபஞ்ச சகிதமாயும், பிரபஞ்ச ரகிதமாயும் விளங்கா நிற்பதால் அவ்வாறுயர்த்தலாயிற்று.

(8) சி .—சகல ஜீவான்மாக்களையும் இப்போழ்து நாம் பார்த்த மட்டில் மனிதருக்கு விசேஷமாய் ஒன்றுங்காணப் படவில்லை. அப்படிக்கான மனிதருக்கே காலத்திரயம் பிடிபடாமலும் மேற்கூறிய விசித்திர சங்கதிகள் இன்னவென்றுணரத்தகாமலுமிருந்தக்கால் தாங்கள் பகர்ந்தது உண்மையென்றெவ்வாறு நிச்சயிக்கலாம் ?

கு :—“ எல்லாமிருட்டென்றெண்ணிக் கொண்டானும் பொல்லா வினைசேர் பிறவிக்குருடன் ” என்றது போல நினைக்கப்படிப்பட்டவைகள் தென்படா திருக்கின், ஏனையோர்கட்கு மப்படியிருக்கு மென்றெண்ணுவது தகுதியன்று. மனிதர்கள் செய்யக்கூடியதை மட்டும் மனிதர்கள் செய்து முடிக்கலாமே தவிர அத்தேவர்களைப்போற் சாதாரணமாய் விசித்திர விலாசம் புரியத்தாமில்லை. ஆனால் மனிதர்கள் ஜோதிர்ஷநூன் மூலமாய்க் காலத்திரயத்தையும் யோக பூரணத்தால் அஷ்டமாசித்தி முதலானவைகளையும் தெரிந்தனுபவிக்கத்தக்கவர்களாவார்கள் ; மற்றையோர்கட்கவை தெரிய வெளிதன்று.

(9) சி :—ஜோதிர்ஷம் அஷ்டமாசித்தி முதலானவைகளை மனிதர்கள் தெரிந்தனுபவிப்ப திருக்கட்டும் ; தேவர்களிருந்தது உண்மையாயிருந்தாலும், இவ்வுலகம் சிருஷ்டிக்கப் பட்டெவ்வளவோ அளவிறந்த காலங்களாயிருக்க வேண்டும். ஆயின், அவர்களிதுகாறு மிறப்பின்றியிருக்கிறார்களெனுங் கூற்றை யேற்றுக் கொளலாமோ ?

குரு :—அக்கோ, அக்கோ, ஈதென்ன வனியாயம்; தேவர்கள், சத்தியமான பகவானுடைய ஐங்கிருத்தியங்களை அண்ட பிண்ட முள்ளளவும் அவரவர்கட் கேற்பட்ட தேவ

வயது நூற்றுக்குக் குறைவின்றி நிலைபரமாயிருந்து நடாத்தும்படி நிருமிக்கப்பட்டவர்களாயும் தன்னையுந் தலைவனையும் அறிவதென்னுந் தத் பதத்தைச் சார்ந்தவர்களாயுமிருக்கிறார்கள். அவர்களையும் நரர்களை மான நுவலில், அறிவீன மன்றோ ?

(10) சி :—அவர்கள் இருக்கிறார்களெனற்குப் பிரத்தியக்கப் பிரமாண மென்னை ?

கு :—பஞ்ச பூத பௌதிகப் பிர விருத்திகளும், அவைகள் தத்தம் ஆணை கடவா தியங்குகின்றதுமே பிரத்தியக்கப் பிரமாணம்.

(11) சி :—இவைகளெல்லாம் க-வது வியாசத்துழி கடவுளருளாயியம்பிய தாங்கள், ஈண்டு தேவர்களருளாயியம்புவதென்னை ?

கு :—இவ்வியாசத்தின் 6-வது வினுவுத்தரம் இதற்குப் பொருளாயிருப்பதால், இவ்வினு வீணேயாகும்.

(12) சி :—இந்த வியாசத்தின் க-வது வினு விடையிற் சொன்ன பல தேவர்களில் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களையும் முறையே பிரேரிக்கும் தேவர்கள் பெயரையும் அவர்களுற்பனமான விவரத்தையும் இலக்ஷணத்தோடு விளக்கி யருண்மின்.

கு :—ஆன்மாக்கள் பொருட்டு ஜட சிருஷ்டி செய்பவருக்குப் பிரமா வென்றும், அவைகளைக் காத்தலாகிய திதி புரிபவருக்கு விஷ்ணுவென்றும், அவைகட்குள வினை தீர்ந்தழித்தலாகிய சங்காரம் நடாத்துபவருக்கு உருத்திரனென்றும், அவ்வினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் ஆன்மாக்களை அழுத்துதலாகிய திரோபவம் வழங்குபவருக்கு மகேசுரனென்றும், அவைகட்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதலாகிய அனுக்கிரகம் அருள்பவருக்குச் சதாசிவனென்றும்பெயர். இவ்வைவரையுமே பஞ்சகர்த்தாக்களென்றும், பஞ்சமூர்த்திகளென்றும், பஞ்ச தெய்வங்களென்றும் பகரப்படும்.

இவர்களுற்பன மெப்படி யெனில், முதலாவதாகிய பிரம்ம நியமப்படத்தில் விவரித்தபடி விட்சேப சலனமே சுபாவமான மாயாந்தகாரத்தில் சப்த தன்மாத்திரையான அரூப ஆகாய முண்டாயிற்று. அதிற் பிரதி பிம்பித்த ஈசுவரனே சதா சிவன்.

அரூப ஆகாயத்தில் சப்தத்துடன் பரிச தன்மாத்திரையான வாயு உண்டாயிற்று. அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரனே மகேசுவரன். ரூபாரூபமான அவ்வாயுவில் சப்தபரிசத்துடன் ரூபதன்மாத்திரையான தேயுவுண்டாயிற்று. அதிற்பிரதிபிம்பித்த ஈசுவரனே உருத்திரன்.

ரூபமுள்ள தேயுவில் சப்த பரிச ரூபத்துடன் ரச தன்மாத்திரையான அப்புவுண்டாயிற்று. அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரனே விஷ்ணு.

ரூபமுள்ள ஜலமாகிய அப்புவில் சப்தபரிச ரூபரசத்துடன் கந்ததன்மாத்திரையான பிருதிவியுண்டாயிற்று. அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரனே பிரமா. இங்குரைத்த பூதியமைந்தும் காரணபூதமாகு மென்பர் கற்றுவல்லோர்.

இப்படிப் பஞ்சபூதாத்மகமாகவுண்டான பஞ்ச கர்த்தாக்கட்கும் முறையே ஜாக்ரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்தவஸ்தைகளுமுள.

இந்தப்பஞ்ச மூர்த்தங்களும் ஈசுவரனுக்குப் பிரதான சுவரூபங்களாகும். அவற்றுள் ஈசுவர ஸ்தூலசரீர முழுதும் ஜாக்ரமாயிருத்தலால், அதைப் பொருந்திய ஈசுவரனை வைசுவாநரனென்றும் அதிஷ்டான சைதன்யம் பிரமாவென்றுஞ் சொல்லலாம்.

ஈசுவர சூக்கும சரீர முழுதும் சொப்பனமாயிருத்தலால் அதைப் பொருந்திய ஈசுவரனைச் சூத்ராத்மா வென்றும் அதிஷ்டான சைதன்யம் விஷ்ணுவென்றும் சொல்லலாம்.

ஈசுவர காரணசரீர முழுதும் சுழுத்தியாயிருத்தலால் அதைப் பொருந்திய ஈசுவரனை அந்தரியாமி யென்றும் அதிஷ்டான சைதன்யம் உருத்திரனென்றும் சொல்லலாம்.

இந்தப் பிரகாரம் மூன்றுசரீரத்துக்கும் மூன்று கர்த்தாக்கள் அதிஷ்டானசைதன்யமாயிருக்கிறதில், முற்கூறிய மகேசுவரன் சதாசிவன் என்ற இரண்டு கர்த்தாக்களும் ஈசுவரகாரணசரீரமாகிய சுத்தமாயையில் அந்தரங்கமாய் வாயுவைப் போலும் ஆகாயத்தைப்போலுங் கலந்து நிற்பவர்களாயிருக்கிறார்கள்.

(13) சி:—நன்று. அவயவ சொரூபமல்லாத ஜலம், அக்னி, ஊதை, சூரியன் முதலிய கிரகங்கள் என்பவைகளைத் தேவர்களென்றும், மண்ணாகிய பூமியைப் பூமிதேவியென்றும், தண்ணீராகிய கங்கையை கங்காதேவியென்றும், வெளியாகிய ஆகாயத்தை, ஆகாயவாணி யென்றும் அவயவசுபரூபப்படுத்திச் சொல்லுவதென்னை?

கு:—அத்தோற்றப் பொருளொவ்வொன்றுக்குமுரிய அதிதேவதைகட்கு அந்தந்தத் தானங்களும் அந்தந்தப் பொருள்களும் சுவதந்திரமாயிருத்தலால், அந்தந்தப் பெயர்கொடு அந்தந்தத் தேவதைகட்கே சொல்லப்படுகின்றன.

(14) சி:—ஆயின் பிருதிவியாகிய மண் பிரமதத்துவமென்றும், அப்புவாகிய ஜலம் விஷ்ணுதத்துவமென்றும், தேயுவாகிய அக்னி உருத்திர தத்துவமென்றும், வாயுவாகிய ஊதை மகேசுவர தத்துவமென்றும், ஆகாயமாகிய வான் சதாசிவ தத்துவமென்றும், தாங்கள் பயிற்றியதற்கு விரோதமாய், இஞ்ஞான்று மண்ணைப் பூமிதேவி யென்றும் ஜலத்தை வருணனென்றும், கங்கையென்றும், அக்னியை அனற்கடவுளென்றும், ஊதையை வாயுதேவனென்றும், விண்ணை ஆகாய வாணி (அசரீரி வார்த்தை) யென்றும், பொருள்பட விகற்பமாய்ச் சொல்லுவதென்னை?

கு:—அந்த ஐந்து பூதாத்மகமான பஞ்சகர்த்தாக்களின் காரண தோற்றமாகிய வஸ்துக்களில் அவர்களே காரணமாயும் பிறதேவதைகள் இரகசியமான சூட்சுமமாயும், வியக்தமான ஸ்தூலமாயுமிருப்பதால், அவ்விருவகையாயும் விளம்பப்பட்டன. இதனால் அவ்வதி தேவதைகளும்

பிரதி தேவதைகளாய் விளங்கிற் றெனற்குப் பூமிதேவி பிரவிருத்தி சத்தியாதலால் அஃது பிரமதத்துவ மென்றும், கங்காதேவி வருணனுடைய சத்தி யென்பது தொட்டு அவ்விருவகையும் ஒரு வகையாகுமென்றும், அஃது இரக்ஷக சத்தியாதலால் விஷ்ணுதத்துவ மென்றும், அக்னிசங்கார தேவதையாகையால் அஃது உருத்திரதத்துவ மென்றும், வாயு துரியாவஸ்தையாகிய மயக்கு தேவதையாகிய அஃது மகேசுவர தத்துவமென்றும், ஆகாயம் சப்த தன் மாத்திரையாகையால் அதற்கு ஆகாயவாணி அசரீரி வாக்குத் தெய்வமென்றும் அபிதானங்கள் வந்தன வென்றும், அஃது நிர்மல ஆகாயத்தைப்போலத் தெளிவைக் கொடுக்குந் தெய்வமாதலால் சதாசிவ தத்துவமென்றும் உணரக் கடவாய்.

(15) சி:—சரி: ஈசுவரப் பிரதிபிம்பர்களான தேவதைகளின் தன்மையை உணர்ந்தேன். அமரர் கெற்பத்திற்கு ஆண்டகையாகிய ஆகண்டலன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களுமென்று இவ்வியாசத்தின் றுவக்கத்தில் தாங்களோதிய விவரமென்ன?

கு:—ஜீவர்களியற்றும் நல்வினைப் பயனுக்குந் தீவினைப் பயனுக்குந் தக்க பலனை யளிக்க வெனவும், படைக்கப்பட்ட தேவர் முனிவர் முதலியோரைப் பாதுகாத்திரக்ஷிக்க வெனவும், அரசனாகப் பிரமதேவனாலுண்டாக்கப்பட்ட இந்திரனென்னும் ஆக்கு வயத்தையுடைய தேவனையே ஆகண்டலனென்றும், அவனோடு அவனாணைக்குட்பட்ட தேவர்களையே ௩௩ கோடி தேவர்களு மென்றுஞ் சொற்றதாகும்.

(16) சி.—சிருஷ்டி கர்த்தாவாற் படைக்கப்பட்ட தேவர் முனிவர் முதலியோரை யிரக்ஷிக்க இரக்ஷக கர்த்தாவாகிய விஷ்ணுவும், பாவபுண்ணியங் கட்குரிய பலனையீய மேன் மூன்று கர்த்தாக்களும் நிலையாயிருக்க இந்திரனைப் பொருத்துச் சொல்லுவதென்னை?

குரு.—இரக்ஷகப் பெருமானாகிய, ஸ்ரீ விஷ்ணுவே அவ்விந்திரனைப் பிரதிபிம்பித்திருக்கின்றார். பஞ்சகர்த்

தாக்கள் அவரவர்கட்குரிய நன்மையைப் புண்ணிய ஜீவர்கட் குதவுவதேயல்லாமல் பாவஜீவர்கட்குரிய பாவப்பலனைச் சாதாரணத் துதவுவதில்லை. அப்படிக்கான பாவப்பலனை ஜீவர்கட்குத் தண்டனையாய் விதிக்கத்தகுதியுடைத் தேவர்களையும் நமனையும் வைத்து நடாத்துந் தேவ நியாயாதிபதியெனும் பெரிய அரசனுயிருப்பவர் அவ்விந்திரனேயாம்.

(17) சி:—நன்று. தேவர்கள் உண்டெனற்கு நூலாதாரமுண்டா?

கு:—ஆம். அவைகள் வேதமுதலிய கலைகளே.

(18) சி:—அவற்றுள், ஹரன், ஹரி, அயன் என்னும் முத்தேவர்களைமட்டும் பெரும்பாலுங்கூறக் காரணமென்னை?

கு:—ஆக்கல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில்கட்குள்ளேயே சர்வகிரியைகளும் அடக்கமா யிருப்பதால், அவைகளையும் அவைகட்குரிய தேவர்களையும் பெரும்பாலுங் கூறப்பட்டுள. எஞ்சிய துவிதகர்த்தாக்கள் கிரியை குறைந்த துரிய, துரியாதீத தேவதைகளாயிருத்தலொட்டு கிரியைகட்கு எடுத்துக் கூறப்படாதது முறைமையே. ஆனால் சுத்தயோகாதி நூற்களில் விசேஷித்துக் கூறப்படுவதுண்டு. தவிர இங்குணர்த்திய நிச்சயம் பகர்ந்த 12 வது வினவிடையிற் கணிக்கும் விவரிப்பைக் கவனிக்கச் செவ்வே தோன்றும்!

(19) சி:—தொழில் குயிற்று மிடத்து அவ்வைந்து கர்த்தாக்கட்கும் தனித்தனி யொவ்வொரு தொழிலையன்றி அதிகம் வாராவோ?

கு:—ஈசனருளால், தனித்தனியாவும் வரும்; ஆயினும் அவரவர்கட் கேற்பட்டிருக்கிற தொழிலே லௌகிகத்திற் பிரதானமாயிருந்து கொண்டிருக்கும்.

(20) சி:—அவ்வைவர்கட்கும் சுவதந்திர சக்திகளுண்டென்றும், அவர்கள் சத்தியோடு கூடியுய்வார்களென்றும் நூல்கள் முறையிடுகின்றனவே? அதனால் அவர் பரதந்திரரோ?

கு :—பிரபஞ்சம் மாயாமயமாதலால் அதை உண்மை போற் பிரேரிக்கும் ஈசுரனுடைய மாயாசக்திகளைத்தானே தன் வயத்தாலுந முறைமையிற் சுவதந்திரத்தொடும் பிரபஞ்சாதீத உண்மையில் பரதந்திரத்தொடும் விளங்குகின் றார்கள். இந்நியாயம் விளங்கற் பாலதாய், 1-வது வியாசம் 15-வது வினாவுத்தரத்திலும் இந்த வியாசம் 7-வது வினாவுத் தரத்திலு முரைத்தேம்.

(21) சி :—அவ்விரண் டிலக்கணமும் ஒருவர் பாற் பொருந்துவ தெவ்விதம்?

கு :—இந்த்ர ஜால வித்தை செய்கிறவன் அத்தைப் பிறருக்கு மெய்யெனக்காட்டித் தன்னுட்டானே பொய்யென நினைந்திருப்ப தேய்ப்ப, அவ்விருவகையும்.

(22) சி :—கிருத்தியங்களைந்தினுள்ளும் தலையாயிருக் கின்ற சிருஷ்டிக்குரிய திசைமுகன், அவ்வைவர்களினும் தலைக்கர்த்தாவா யிருந்துகொண்டிருக்கக் கடைக்கர்த்தா வாய்க்கூறக் காரணம் யாது?

கு :—பூதமைந்துள் ஆகாய முதல் அப்பு வரை நான் கின் வழித்தாய் நான்கு கர்த்தாக்கள் தோன்றியதற்பின், ஐந்தாவதாகிய பிருதிவியினிடமாய்ப் பிரமன் தோன்றிக் கடபடாதி தோற்றங்கள் கற்பிக்கப்பட்டனவால், ஜென்மத்தில் நால்வர்கட்கும் கடைசியாயும் தொழிலில் முதன்மையாயும் சிருஷ்டி கர்த்தனைச் சொல்லலாகும். உரிய திருஷ்டாந்தம்:— (1) முதலிலொரு வித்தாக விருந்து (2) பின்னர் அதனுள் முளை தோன்றி (3) தழை தோன்றி (4) பற்பல கிளை தோன்றி (5) தகுந்த விருக்கமாய்ப் பிரவிருத்திப்பட்டதின் மேல், அவ்விருக்கமே யனேக வித்துக்களைத் தாற்கு ஒரு காரணமாயிருத்தல் போன்றும்.

(23) சி:—சிலர் பஞ்சகர்த்தாக்களைவருள்ளும் விநாயக ரென்பவர் தலையாவாரென்றும், எக்கிருத்தியங்கட்கும் முதன்மையாவாரென்றும் தீர்மானித்து அவ்வாறு நடப்ப தென்னை?

கு:—ஆகமத்திற் சொல்லப்படுகிற சரியை கிரியை யோகமெனும் மூன்றினுள்ளும் விநாயக மூர்த்தி முதல்வரா யிருக்கிறாரென்றும், அந்த யோகத்திற்கான ஆதார பீடங்கள் ஆறினுள்ளும் பிரதமமாகிய மூலாதாரத்தில் அவர் பதியாயிருக்கிறாரென்றும், முக்கிருத்தியங்களும் பிரணவத்தால் நடத்தப்படுதலாலட்டு அதற்கும் பிரணவசுவரூபியா யிருக்கிறாரென்றும் சாஸ்திரங்கள் வெளிப்படுத்துகின்றமை யால் அவ்வாறு நடப்பதாயிற்று.

(24) சி:—அம்மூர்த்திக்குரிய ஸ்வயகிருத்திய மேது வென்பதையும், அவருக்குச் சிந்தூரமுகம் வாய்த்த தெவ் வாறென்பதையும், வாசஸ்தானம் இவ்வண்டத்தி லெங்ஙனென்பதையும் விரிக்க வேண்டும்.

கு:—மொழிந்த தொழில்களில், விநாயகருக்கு மூல காரணமாயிருத்தலைத் தவிர வேறில்லையென்றும், அப்படிக் கான நிஷ்களமூலம் தேவர்கள் வேண்டுதற்படி கஜாமுகாசுர சம்மார நிமித்தம் ஓரவதாரம் அக்கஜமுகாசுர தோற்றத்திற் கெதிர் வடிவமாய்ச் சமைந்த தென்றும், நிலை அண்டத்தின் மூலஸ்தானம் என்றும் அறி. அவ்வடிவஞ் சமைந்த வர்த்த மானத்தையும் இவ்வுழி சுலபமுறைக்கக்கேட்டி! மாகத னென்னு முனிவனுக்கும் விபுதையென்னும் இராக்கத ஸ்திரீக்கும் யானைமுகத்துடன் புத்திரனுயுற்பவித்துத் தேவர் பூதம் மனிதர் மிருகம் ஆயுதம் முதலியனவால் இறவாவரம் சிவபிரானிடம் பெற்றனன். பின்பு அக்கஜமுகாசுரன் உம் பர்களை இம்சித்துவருந் துன்பம் ஒழிக்கற் கென்று சிவபிரானுற் கிருபை கூர்ந்து வேதண்டச் சாரலில் (வெள்ளி யங்கிரி)ஒரு சோலை மத்தியிலுள்ள விசித்திரமண்டபத்துக்கு எழுந்தருளிவந்து அவண் வரைந்துள ஓவியங்களிற் சித்தி ரித்திருந்த சிவ சத்தி பிரணவங்களை ஆண் யானை வடிவும் பெண் யானை வடிவுமாய்ச் சேரும்படி செய்து அக்கருவினி டம் தாமே யம்சம் செய்தவுடன் யானை முகத்துடன் பல வுருக்கலந்த திவ்ய திருமேனியுடன் வெளிவந்தார். அவரே விநாயகர். அவர் தமது நான்கு கொம்புகளில் வலக்கொம்பை முறித்து அமர் முனையிற் கஜமுகாசுரன் பேரிலெறிந்து

கொன்ற நிமித்தம் துன்பு தீர்ந்த வமரர்கள் தாங்க ளவ்வசுரனுக்குச் செய்து வந்த மரியாதையான தலையிற்குட்டிக் கொள்ளுதலையும் தோப்புக் கண்டம் போடுதலையும் அவ் விநாயக மூர்த்திக்குச் சமர்ப்பித்து வருவதானார்கள். அம் முறையே நம்மவர்களுமியற்றி வருகின்றனர்.

(25) சி:—அவ்விநாயகரைப் பிரமசாரியென்றும், வல்லபை நாயகனென்றும், சித்தி, புத்தி, நாயகனென்றும் சிலர் பன்னுவதென்னை?

கு:—மூல ஸ்வபாவீகத்தில் அவர் பிரமசாரியென்றும், அசுர சம்மார காலத் தெதிர்த்த வல்லபையாகிய மாயாசத்தியைத் தன் வயப்படுத்திக் கொண்டது தொட்டு வல்லபை நாயகனென்றும் சித்தி, புத்தி, என்கிற சத்திகளோடு கூடி நிற்றலினால் சித்தி புத்தி நாயகனென்றுஞ் சொற்றதாகும். இவ்வரலாறு கணேச புராணத்தில் விசேஷமாய்க் காணலாம். மேல் வழுத்திய தாற்பரியங்கள் ஞானார்த்தமுமாகும்.

(26) சி:—அவருக்குப் பிள்ளையார் என்ற ஒரு நாமம் கற்பிதமாகவும், வயிறு விசாலமாகவும், ஊர்தி உந்துருவாகவும் ஏற்பட்டதெது நிமித்தம்?

கு:—ஈசனுடைய பிள்ளையென்பது பற்றிப் பிள்ளையாரென்ற வபிதானமும், பால்ய திசை மாறாத நித்திய பருவத்தையும் சமஸ்த கற்போதயத்திற்கு இடமாகிய வுதரத்திற்குந் தானே பிரணவமென்பதையும், ஆரோபிக்கத் தொந்தி வயிறும் அதனாலவருக்கு "லம்போதரன்" என்கிற பெயரும், கஜமுகனோடு பொருதும் ஆயோதனத்தில் (போரில்) அவ்வசுரன் மாயமாய் உருவெடுத்து வந்த கந்துளத்தை (பெருச்சாளியை) மிஞ்ச வொட்டாமற் பிடித்து மேல் ஆரோகணித்தது முதல் அஃதூர்தியாகவும் ஏற்பட்டன.

(27) சி:—அற்றேல் கற்போதயத்திற்கு மாத்திரமோ பிள்ளையார் பிரணவமாயிருப்பது?

கு:—தொழில்களைந்துள் சிருஷ்டி துலக்கமாயிருந்து கொண்டிருத்தலினால், கிரியா நியாயம்பற்றி அன்னணமாயது.

அதுவே முன்னும் பின்னும் விளைக்கீடாகிய சர்வ் புவன காரியமாய் விளங்கும்.

(28) சி :—அவ்விநாயகரை அயன் கற்பித்ததாகத் தானே யிருக்கவேண்டும்? அவரை முன்னோனென்று மொழிவதெற்றோ?

கு :—இவ்வௌகீகத்தில் இருவினைக்குட்பட்ட ஜீவர்களை வேதன் படைப்பதென்றும் அதன் மேல் விசேஷார்த்த மாய்த் தமதருட்சக்திகொடு ஈசுரவனே படைப்பதென்று முள்ளபடிக்கி அவ்வானை முகத்தேவை ஈசுவரனே படைத்தாரென்றும் சகல கருமங்கட்கும் அவரை முன்னிட்டு நடத்துதலால் அவைகட்கு முன்னோனென்று பெயரேற் பட்டதென்றும் அறி.

(29) சி:—பிரமன் பிரபஞ்ச சிருஷ்டிகர்த்தாவாயிருந்து கொண்டிருக்கச் சித்தஜனென்பானொருவன், சிருஷ்டிக்கிறு னென்றும் சிருஷ்டிக்குக் காரணமாயிருந்துகொண்டிருக்கிறு னென்றும் நூல்களுரைப்பதென்ன ?

கு :—ஜீவாத்மாக்களுடைய ஜடவுற்பத்திக்குக் காமங் காரணமாயிருத்தலாலும் அக்காமத்திற்குக் கந்தர்ப்பனாகிய சித்தஜன் கர்த்தாவாயிருத்தலாலும் அவன்விட்சேபதத்துவ மாய்ச் சதுர்முகனுக் கனுஜனாய்ச் சிருஷ்டிக்குப் பலனாய் அவதரித்ததனாலும் அப்படியுரைக்கலாயிற்று. இப்படியே ஒன்றுக்கொன்றுபகரணமான காரிய நிமித்தம் காலகாரணாதி கட்கும் அனேக தேவதைகளுண்டென்றறி.

(30) சி :—கந்தர்ப்பனாகிய இரதி காதலன் உதயமா முன்னம் அவனது வினை புரிந்தவர் யாவர் ?

கு :—பிரவிருத்தி மாயை.

(31) சி :—அம்மாயை காமனேற்பட்ட காலமாகிய இக்காலத்தின்றோ ?

கு :—எக்காலத்தும் பிரவிருத்தி மாயையினாலேயே எழுவகைத் தோற்றங்களும் விருத்தியாகிக் கொண்டிருக் கின்றன. அம்மாயையின் பிரேரகர்களாகவே மறைக்கயிற்

னோனும் (பிரமன்) அலர்க்கணையோனும் (மன்மதன்) பிரதி சுவரூபிகளா யிருந்துகொண்டிருக்கிறார்கள்.

(32) சி:—இவ்வியாசத்தின் 12-வது வினாவுத்தரத்தில் பிரமதேவனை ஈசுவரப்பிரதி பிம்பனென்றும் இங்ஙனம் மாயையின் பிரதிசுவரூபனென்றும் இருபிரிவாய்ச் சொல்லுவதென்ன?

கு:—அணுவாகிய ஜீவான்மா ஈசுவரப்பிரதிபிம்பமென்றும், அதின் பிரதிதத்துவ முதலாய சரீரம் மாயாப்பிரதிபிம்ப மென்றும் இருவகையாய்ச் சொல்லப்படும் அதினாலெனவும் இவ்வுவளகவகையும் எவர்க்கும் பொதுவெனவு மறிதி.

(33) சி:—மேற்கூறிய காமனுக்குரிய விருதுகள் இயல்புக்கு விரோதமாய் கரும்பு, சுரும்பு, அரும்பூ, காற்று, கடல் மடல், மதி, மகரம், குயில், தையல், என்பனவா யேற்பட்டிருக்கிறது மன்றி, அவன் அனங்கனுபு மிருக்கிறதாக வெளியாகிறது. அப்படிக்கானால் அவன் காரியமெற்று?

கு:—அவையனைத்தும் காமத்திற்குரிய சின்னங்களாகுமென்றும், விஷ்ணு புதல்வனாகிய அம்மன்மதன் சுயசொரூபம் ஒரு காலத்திற் சங்கரனாற் சாம்பராகி விட்டதென்றும், பின்னர் அனங்கனாய்ச் சூட்சும மாயாரூபம் பெற்று, சர்வ ஜீவாத்மாக்களின் சித்தத்தினிடமாய்ப் பிரவேசித்துச் சித்தஜனென்னும் பெயர் பெற்றிருக்கிறானென்றும் புராணங்கள் புகலும். இதனால், எரிந்தெழுந்தவனிவனென்றும்.

(34) சி:—சரி. விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் நால்வர்களும் விநாயகமூர்த்தியும் வேதத்திற்குரித்தாகாமல், விதி உரித்தான தென்னை?

கு:—அவர்களும் ஆதி வேதத்திற்கு உரித்தானவர்கள்தான்; அதில், அவ்வேதம் கர்மநூலாக வனந்த விதமாய் விரிந்து சகல தர்மமும் நீதியுமாய் விளங்கிய நிமித்தம், ஜீவாத்மாக்கள் செய்யும் இருவினைக்குத் தக்க பாவ புண்ணியங் கண்டு பலனுதவிச் சிருஷ்டி செய்வதவசியம் பற்றி,

ஈசுவரன் சிருஷ்டி கர்த்தாவிடம் வேதத்தை ஒப்புவித்தார். அதனாலவ ருரித்தானார்.

(35) சி :— அம்மறையோனுக்கு நாமகளென்னுஞ் சார தாள் நாவிலிருக்கிறாளென்று நூல்களுவலுகின்றன. அற்றேல் அவர் சுயமாய் *ஒத்தோதச் சக்தியிலரோ?

கு :— ஈசனை நோக்கித் தவம்செய்து கலைமகளாகிய வேத சக்தியைத் தான் பெறு முன்னரேயே, அப்பிரமன் வேதத்திற்குடையோரா யெழுந்தருளப் பெற்றார். ஆயினும், ஓத்தோதுங் காரியம் எங்கணும் விசேஷிக்கும் பொருட்டு அப்பாமகளை நாவில் அந்தரங்கமாயிருத்திக் கொண்டார். அச்சக்தி வாக்குக் கதிதேவதையாயுள்ளார்.

(36) சி :— இம்மட்டில் தேவர்களின் தன்மையைத் தெளியலானேன். அதில், அயனைச் சிலரும், ஹரியைச் சிலரும், ஹரனைச் சிலரும் விசேஷமாய்ப் பிதற்றித் தர்க்கங்கள் பண்ணிக் கொள்ளுவதற்கிணங்க, வேத முதலிய கலைகளும் ஏற்பட்டிருப்பானேன்.

கு :— மூலப் பிரமாவின் சிருஷ்டித் தொழிலுக்காக அவராலேற்பட்டிருக்கிறவர்களையும், அவருருவடைந்தவர்களையும், அவரடியார்களையும், பிரமாவென்றும்,

மூல விஷ்ணுவின் இரக்ஷகத் தொழிலிற்காக அவராலேற்பட்டிருக்கிறவர்களையும், அவருருவடைந்தவர்களையும், அவரடியார்களையும் விஷ்ணுவென்றும்,

மூலவுருத்திரனின் சங்காரத் தொழிலிற்காக அவராலேற்பட்டிருக்கிறவர்களையும், அவருருவடைந்தவர்களையும், அவரடியார்களையும் உருத்திரரென்றும் சொல்லப்படும். அவற்றுள், அம்மூல விஷ்ணு பிரமாக்களுக்கு அனேக பிரமா விஷ்ணு உருத்திரர்கள் தாழ்ந்தவர்களாகவும், மூல விஷ்ணுவுக்கு அனேக விஷ்ணு உருத்திரர்கள் பிரமாக்கள் தாழ்ந்தவர்களாகவும், மூலவுருத்திரனுக்கு அனேக உருத்திரர் விஷ்ணு பிரமாக்கள் தாழ்ந்தவர்களாயும் கிருத்திய

* ஒத்து = வேதம்.

நிமித்தம் பிரமாண்டங்கள் தோறும் இருத்தலால் அவரவர் புராணகலைகள் அவரவரையுயர்த்தியும் மற்றவரைத்தாழ்த்தியும் விளம்புகின்றன. இவ்வுண்மையறியாமல் வாய் மதம் பேசி வெறும் புளித்தின்று நாக்கெரிகின்றார்கள். அதனைமக்குறும் பயனென்னை ? கிருத்திய நிமித்தம் பிரமாண்டங்கடோறும் பிரம, விஷ்ணு, உருத்திரர்களுண்டெனற்குப் பிராமாணியம் :—ஸ்காந்தம், வீரமாகேந்திர காண்டம் 9-வது அத்தியாயம், 8, 9, 10, 11, 12, 13-வது சுலோகங்களி னர்த்தம் " அத்தூத னெங்கு மோடிச் சென்று பார்த்ததில் அந்தப் பிரமா சகல தேவர்களுடனும் ஸ்ரீ முருகையனண்டையிலிருப்பதைக் கண்டு பிறகு திரும்பி வந்து செய்தியையுள்ளபடி யுரைக்க, சூரபத்மனும் அத்தூதன் வசனத்தைச் செவியுற்று அப்போது மனசில் பிரமாதி தேவர்களையெல்லாம் கோபித்துக் கொண்டு, உடனே மற்றோரண்டத்திற் கதிபரான பிரமனை யழைப்பித்துத் தூதன் முகமாய் அவரை நோக்கி ' ஓ பிரமனே ! நமது நகரத்தை முன்னிருந்தமாதிரி செய்துவிடெ'ன, உடனே அப்பிரமன் சீர்திருத்தி விட்டுச் சூரனிடஞ் செல்ல பின்பு சூரனும் அவரை வெகுமானத்துடன் தனது தூதர்களோடு கூட அவரது சுய அண்டத்திற்குச் செல்லும்படி யனுப்பினன் ; உடனே அத்தூதர்கள் பிரமனை இப்பிரமாண்டத்திற்கு வெளியிற் கொண்டுபோய்விட அவர் சென்று விட்டனர் என்பனவே."

(37) சி :—அஃதெப்படிக்காயினும் திரிகர்த்தர்களில் வேதன் இருவரையும் படைத்ததாகவும், விஷ்ணு பிரமாவைப்படைத்து அவரானுருத்திரனைப் படைத்ததாகவும், உருத்திரன் விஷ்ணுவைப் படைத்து அவராற் பிரமாவைப் படைத்ததாகவும், பராசக்தி உருத்திரனையும் விஷ்ணுவையும் படைத்ததாகவும் புராணக் கலைகள் புகலுவதென்னை ?

கு :—யாம் மேலே சொற்றதனைய அவரவர்கள் தன்மைக்குத் தாழ்ந்தவகையில் படைத்ததையே அவ்வாறாகவும், ஈசுவரனுடைய சக்தியினின்றும் சதாசிவாதி பஞ்ச

கர்த்தாக்கள் தோற்றியதனால் அவர்களைப் பிரசக்தி படைத்ததாகவும் கூறலாயிற்று. அதில் எவற்றுக்குங் காரணம் :—இதுகாறும் விளக்கி வந்ததில் வாசா மகோசரமாய்ச் சேட்டித்து நின்ற ஈசனாகிய பரமசிவனேயாம். அப்பரமசிவபெருமானின் வர்த்தமானங்களை அடுத்த வியாசத்திலருள்வோம்.

(38) சி :—மெய்யே. இதுகாறுந் தேவர்களுண்டோ வில்லையோ வென்றிருந்துள சந்தேகங்களொழிந்து உண்டென்பது கண்டு சந்தோஷமானேன். என் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்ட தேவரீர் திருவடிகளைப் பன்முறை பணியா நின்றேன். மற்றுந்தெளிய வேண்டுவனவற்றை நாளைக்காலை யறிவித்துக் கொள்கின்றேன், அவ்வணமருள் செய்க.

கு :—நன்று. நன்று. சற்குருநாதன் தயவு பாலிப்பாராக.

தேவர்களைக் குறித்த வியாசம் முற்றிற்று.

---

இவ்வியாசம், திருவாடானை - திரு. T. முத்துசாமிக் குருக்களிடமிருந்து கிடைத்தது.